விலை ரூபா: 8.00
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 பங்குனி 16 செவ்வாய்க்கிழமை (29.03.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 100

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

பிந்திய செய்தி

# இந்தோனேசியாவில் நேற்றிரவு புவி நடுக்கம் இலங்கையை தாக்கலாமென அபாய அறிவிப்பு

## மக்கள் நள்ளிரவில் இடம்பெயர்வு

(கொழும்பு)

இந்தோனேசியாவில் நேற்றிரவு நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது. இதனால் கரையோரப் பகுதியிலுள்ள இலங்கை மக்களை அவதானமாக இருக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தோனேசியாவில் சுமாத்திரா தீவிற்கு வடக்குக் கடற்பரப்பில் இலங்கை நேரப்படி நேற்றிரவு 10.10 மணியளவில் நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது. இந் நில நடுக்கம் ரிச்டர் அளவுகோலின்படி 8.7 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என அமெரிக்க புவிச் சரிதவியல் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இத் தாக்கமானது அந்தமான், நிக்கோபார் தீவுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்தோனேசியாவில் ஏற்பட்ட தாக்கத்தில் கட்டட இடிபாடுகளில் சிக்கி 12 பேர்வரை இறந்துள்ளனர். ஏனைய இடங்களில் ஏற்பட்ட சேத விபரங்கள் குறித்து செய்தி, அச்சுக்குப் போகும்வரை கிடைக்கவில்லை.

இப்புவி நடுக்கத்தினால் ஏற்படுமென எதிர்பார்க்கப்படும் வேகமானது கடந்த டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி இடம்பெற்ற சுனாமித் தாக்கத்தினைவிட 10 மடங்கு குறைவானது எனக் கூறப்பட்டது.

எனினும், சுனாமிப் பேரலை போன்ற தாக்கம் இடம்பெறுமா இல்லையா என்பது குறித்து தகவல் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இத் தாக்கமானது இன்று அதிகாலை 1.10 மணியளவில் இலங்கை இந்தியா போன்ற நாடுகளுக்கு தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும் என எதிர்பார்க்கப்பட்டபோதும் தாக்கமெதுவும் இதுவரை ஏற்படவில்லை.

இலங்கையில் வடக்குக் கிழக்கு மற்றும் தென்பகுதியைச் சேர்ந்த கரையோரப் பகுதி மக்களை 2 மைல் தூரத்திற்கு அப்பால் விலகியிருக்குமாறு வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது. யாழ்ப்பாணத்திலும் கரையோரப் பகுதி மக்களை அவதானமாக இருக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. இதேவேளை சுமாத்திரா (12 ஆம் பக்கம் பார்க்க)

# பருத்தித்துறையில் நேற்று மாபெரும் கண்டனப்பேரணி

## பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்கேற்பு

(நமது செய்தியாளர்கள்)

தமிழர் தாயகப் பிரதேசங்களில் இராணுவத்தின் கட்டுப்பாட்டிற்குள் உட்பட்டுள்ள உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றி மக்களின் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்தக்கோரி நேற்று வடமராட்சி பொது அமைப்புக்களினாலும் கடற்றொழிலாளர் கூட்டுறவு சமாசத்தினாலும் நேற்று மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியொன்று நடாத்தப்பட்டது. இப் பேரணியில் பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்துகொண்டனர். (12 ஆம் பக்கம் பார்க்க)



## யாழ். குடாநாட்டில் பெற்றோலுக்கு தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் நேற்று எரிபொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது. குறிப்பாக அனைத்து எரிபொருள் நிலையங்களிலும் பெற்றோல் முடிவடைந்து விட்டதாக அறிவிக்கப்பட்டிருந்ததுடன் வியாபார நிலையங்களில் பெற்றோலின் விலை அதிகரிக்கப்பட்டும் இருந்தது.

மோட்டார் சைக்கிள்கள் வைத்திருந்தோர் பெற்றோல் நிரப்புவதற்காக எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நேற்று முண்டியடித்துக் கொண்டிருந்தனர்.

(ச)

## சர்வதேச அமைதிக்கான குழுவுடன் தமிழீழ அரசியல்குழு சந்தித்துப் பேச்சு

(ஒஸ்ரியா)

ஐரோப்பிய நாடுகளில் பயணம் மேற்கொண்டுள்ள தமிழீழ அரசியல் விவகாரக் குழுவின் பிரதிநிதிகள் ஒஸ்ரியாவில் சர்வதேச அமைதி முயற்சிகள் தொடர்பான முதுபெரும் கல்வியியலாளர் பேராசிரியர் ஜோகன் ஹால்டங்க் தலைமையிலான குழுவினரை சந்தித்துப் பேசினர்.

தமிழீழ அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் ஒஸ்ரியாவின் ஸ்டேட்செலய்னிங்கில் உள்ள சர்வதேச அமைதி முயற்சிகள் தொடர்பான நிறுவனத்தில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்கள் நேற்று போராட்டம்

(கொழும்பு)

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த தொழிற்சங்க்ங்கள் நேற்று முற்பகல் முதல் பணிநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மிகுதிப் பங்குகளை தனியாருக்கு விற்பனை செய்ய அரசினால் எடுக்கப்பட்ட முடிவை அடுத்தே இப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக ஊழியர்கள் தெரிவித்தனர்.

இதன்காரணமாக கொலன்னாவ மற்றும் சவோஸ்கந்த எண்ணெய்க் குதங்களில் இருந்து எரிபொருள் விநியோக நடவடிக்கைகள் முற்றாகத் தடைப்பட்டதாக பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நாடளாவிய ரீதியில் குறிப்பாக கொழும்பு மற்றும் கண்டி ஆகிய பிரதேசங்களில் எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் வாகனச் சாரதிகள் எரிபொருள் நிரப்புவதாக நீண்டவரிசைகளில் காத்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் யாலிய மெதகம கருத்து தெரிவிக்கையில்,

இந்தப் பணிநிறுத்தப் போராட்டத்தின் மூலம் நாடளாவிய ரீதியாக மக்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை தீர்ப்பதற்காக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதெனவும் எப்படி இருந்தபோதிலும் (12 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதானப் பேச்சுவார்த்தைக்கு இந்தியா நடுநிலை வகிக்க வேண்டும்

## அரசைக் கோருகிறார் கருணா

தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகள் புலிகள் என்ற எண்ணத்துடன் ஒட்டிக்கொண்டிருக்காமல் தம்மையும் பேச்சுக்கு மீண்டும் அழைக்குமாறு கருணா அரசாங்கத்தைக் கேட்டுள்ளார்.

நோர்வே தரப்பினரை அனுசரணையாளராக தொடர்ந்தும் வைத்திருக்காமல் எதிர் காலத்தில் சமாதான திட்டங்களிற்கு இந்தியாவை அழைக்க வேண்டும் என்றும் அவர் அரசாங்கத்தைக் கேட்டுள்ளார்.

விடுதலைப் புலிகள் கருணா தரப்பினர் மீது தாக்குதல் நடத்திய ஒருவருடப் பூர்த்தியை முன்னிட்டு அவர் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். அவ் அறிக்கையிலேயே இவ் வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டுள்ளன.

சுனாமியின் போதும் அதன் பின்னரும் எமது மக்கள் அனுபவித்து வந்த துன்பங்களில் பங்குகொள்ளவோ அவ் இடங்களிற்குச் சென்று பார்வையிடவோ என்னால் முடியாது இருந்ததையிட்டு வருத்தமடைகிறேன். (12 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
யாழ் கொழும்பு
தினசரி விமான சேவை
எக்ஸ்போ எயார்
T.P: 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
Your friend in the skies...
E-Mail: jaffna @ expoavi.com, reservations @ expoavi. com,
வானத்தில் உங்கள் நண்பன்...

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# முதல் தடவையாக இலங்கைச் சிறுவர் பாதுகாப்பு குறித்து கனடா பாராளுமன்றில் கலந்துரையாடல்

(கொழும்பு)

வரலாற்றில் முதல் தடவையாக கனடாவில சமஷ்டி பாராளுமன்றம இலங்கையில் சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக கலந்துரையாடியுள்ளது.

இதன் உபகுழு கூட்டத்தில் வெளியிடபபட்ட அறிக்கையின்படி இலங்கையில் சிறுவர்களை போராளிகளாக சேர்த்துக்கொள்வதை நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும. அவற்றை தடுப்பதுடன் மேற்படி சிறுவர்களை பாதுகாப்பதற்கும் கனடாவின் நிதியுதவிகள் பயன் படல் வேண்டுமென்றும் கனடாவின் அரசாங்கத்திற்கு அழுத்தங்கள் கொடுக கப்பட்டுள்ளன.

மேற்படி அறிக்கை மனித உரிமைகளுக்கானதும் சர்வதேச அபிவிருத்திக்கானதுமான கனேடிய பாராளுமன்றின் உபகுழுவால் தயாரிக்கப்பட்டு கனேடிய வெளிவிவகார அமைச்சினால் வெளியிடப் பட்டுள்ளது.

மார்ச் மாதம 23 ஆம் திகதியன்று இடமபெற்ற இக்குழுக் கூட்டத்தில அதன் தலைவர் டேவிட் ஹில்கோர் தெரிவிகையில், இலங்கையில் சிறுவர்களை படையில் சேர்த்துக் கொள்வதை பற்றி சர்வதேச சமூகமும ஐ.நா.பாதுகாப்புக் கவுன்ஸிலும் கவனத்தில் எடுத்துள்ளன.

யுனிசெவ் அறிக்கைகளும் இது குறித்து தெளிவுபடுத்துகின்றன.

இது பற்றி 3516 முறைப்பாடுகள் யுனிசெவ்விற்கு கிடைக்கப் பெற்றுள்ளன.

இதைவிட சிறுவர்களைத் தற்கொலைப் படையாளிகளாக்கவும் இலங்கையில்சிலர் முயற்சி செய்கின்றனர் எனறும் கனேடிய கன்ச வேட்டிங கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (க-6)

# முஸ்லிம் வர்த்தகர் ஒருவர் விமலுக்கு பரிசு வழங்கினார்

(கொழும்பு)

ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்சவினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான கையடக்கத் தொலைபேசி ஒரு முஸ்லிம் வர்த்தகரால் அனபளிபபாக வழங்கப்பட்டது என தெரிவிக்கப்படுகிறது.

சஜாட் ம.்.சூட் எனும் பெயருடைய இவ்வர்த்தகர் தொலைபேசி நிறுவனமொன்றின் தலைவராக விளங்குகிறார் எனத் தெரிவிக்கப் படுகிறது. அதைவிடவும் வேறு பல வர்த்தகங்களிலும் அவர் ஈடுபட்டு வருகிறார்.

டுப்பிளிகேஷன் வீதியில் ஒரு விடுதியையும் அவர் நிர்வகித்து வருகிறார்.

ஆயினும் இவரின் வர்த்தகம் துறைமுக அதிகாரங்கள் அமைச்சின் கீழ் இருந்து வருகிறது.

மேற்படி தொழில் அதிபர் அமெரிக்காவிலிருந்து கொண்டுவரப்பட்ட கையடக்கத் தொலைபேசியையே வீரவன்சவிற்கு பரிசாக வழங்கியிருந்தார்.

மேற்படி தொலைபேசியின் பெறுமதி குறித்து ஜே.வி.பியினுள் பலரும் வியப்படைந்திருந்தனர். அத்துடன் இவ்வளவு பெறுமதியான தொலைபேசி எவ்வாறு கிடைத்தது என்று அவரிடம் கேள்வி எழுப்பியுமிருந்தனர்.

அதற்கு பதிலளித்த விமல் வீரவன்ச அது ஒரு முஸ்லிம் தொழிலதிபரிடமிருந்து பரிசாக கிடைத்தது என பதிலளித்தார். தான் அதனை வாங்கவில்லை பரிசாகப் பெற்றுக் கொண்டேன் என்றார். (க-6)

## மஹோற்சவப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

தாவடி ஸ்ரீ அம்பலவாண வேத விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவ பெருவிழா இன்று கொடியேற்றத துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 18 தினங்கள் நடைபெறும் இவ் விழாவில் தேர், தீர்த்த உற் சவம் முறையே 14,15 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.(க)

# இராசி பலன்

**29.03.2005**
**பங்குனி 16, செவ்வாய்க்கிழமை**
**சதுர்த்தி பின்னிரவு 12.37 மணிவரை**
**விசாகம் பின்னிரவு 12.39 மணிவரை**
**இராகுகாலம் 3.13 - 4.43 மணிவரை**
**சுபநேரம் 10.43 - 12.13 மணிவரை**
**சங்கடகர சதுர்த்தி**

| | |
|---|---|
| மேடம் | கீர்த்தி, பிரயாணம், நண்பர்கள் சந்திப்பு, காரிய அனுகூலம். |
| இடபம் | மனமகிழ்ச்சி, தடைப்பட்ட காரியம் கைகூடும், போசன சுகம், தேகநலன். |
| மிதுனம் | குடும்பக் கவலை, பணத் தட்டுப்பாடு, காரிய தாமதம், உடல் வியாதி. |
| கடகம் | தன்னம்பிக்கைக் குறைவு, தனவிரயம், ரோகநிலை, புதிய சிந்தை. |
| சிங்கம் | நற்கீர்த்தி, கூட்டு முயற்சி, பிரயாண நன்மை, தொழில் வருமானம். |
| கன்னி | மனோ சங்கடம், போசன சுகக் குறைவு, அதிக செலவு, காரிய இடையூறு. |
| துலாம் | மாதர் நட்பு, வெகுமானம், சயன சுகம், நல்ல முயற்சி. |
| விருச்சிகம் | பிறருக்கு உதவுதல், இடமாற்றம், தனவிரயம், சோம்பல் நிலை. |
| தனுசு | தனதான்ய சேர்க்கை, ஆரோக்கியம், குடும்ப சுகம், முயற்சி கைகூடும். |
| மகரம் | பிரபுத்தனம், இஷ்ட சித்தி, நன்கொடை, சுபநிகழ்வு. |
| கும்பம் | புதிய திட்டமிடல் எதிர்பாராத செலவு, குடும்பக் கவலை, கட்டுப்பாடு. |
| மீனம் | முழங்கால் வலி, கலகம், காரிய-தாமதம், போசன சுகம். |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது

-வள்ளுவன்

# விண்ணப்பம் கோரல்

(சாவகச்சேரி)

கல்வி அமைச்சின் கீழ் அபிவிருத்தி உதவியாளர், திட்டமிடல் / நிதி உதவியாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் 18 வயதிற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்ட பட்டதாரிகளாக இருக்க வேண்டும்.

தகுதியுடையோர் தமது விண்ணப்பங்களை மேலதிக செயலாளர், கல்வி அமைச்சு, இசுருபாய பத்தரமுல்ல, என்ற முகவரிக்கு அடுத்த மாதம் 7 ஆம் திகதிக்கு முன்பதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

இப் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு, நேர்முகப் பரீட்சை மூலம் நடைபெறும். (7-21)

★ ★ ★

(சாவகச்சேரி)

சுற்றுலாத்துறை அமைச்சில் அபிவிருத்தி உதவியாளர் பதவிக்கு பட்டதாரிகளிடம் விண்ணப்பம் கோரப் பட்டுள்ளது.

இப்பதவிக்கான ஆட்சேர்ப்பு, நேர்முக் தெரிவு மூலம் இடம்பெறும். விண்ணப்பங்கள் செயலாளர், சுற்றுலாத் துறை அமைச்சு இல.64, காலி வீதி கொழும்பு-03 என்ற முகவரிக்கு அடுத்த மாதம் 05 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைத்தல் வேண்டும். (7-21)

★ ★ ★

(சாவகச்சேரி)

இலங்கை கால் நடை, காணி நீர்ப்பாசன அமைச்சின் கீழ் உள்ள இலங்கை நில அளவை சேவையாளர், சேவையின் வகுப்பு **III**, தரம் **II** பதவிக்கு விண்ணபபங்கள் கோரப்பட்டுள்ளது.

தகமையுடைய 21வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப் பட்டோர் அடுத்தமாதம் 08 ஆம் திகதிக்கு முன்னதாக தமது விண்ணப்பங்களை நில அளவையாளர் நாயகம் இல.150, கிருலவீதி நாரஹேன்பிட்டிய, கொழும்பு -05 எனற முகவரிகக அனுப்பி வைத்தல் வேண்டும். (7-21)

# பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன

(கொழும்பு)

தேசிய கல்வி நிறுவனம் 2002 இல் நடாத்திய முதுகல்விமாணி பட்டப்பின் பட்டப் பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன.

மஹரகம தேசிய கல்வி நிறுவகம் நடாத்திவரும் இம் முதுகல்விமாணி பட்டப்பின் பட்டக்கற்கைநெறி கடந்த 10 ஆண்டு காலமாக வெற்றிகரமாக நடாத்தப்பட்டு வருகிறது.

1999 ஆம் ஆண்டு இல் தமிழ் மொழிமூல முதுகல்விமாணி கற்கை நெறியை அறிமுகப்படுத்திய போதிலும் பின்னர் அது கைவிடப்பட்டது.

ஓரிரு நாட்களில் பரீட்சை முடிவுகள் குறிப்பிட்ட பரீட்சார்த்திகளுக்கு அனுப்பி வைக்கப்படுமென்று கூறப்பட்டுள்ளது. (க-9)

## தேசிய கல்வியியற் கல்லூரி

# நுண்கலைமன்றம் நடாத்திய ஓவியப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி நுண்கலைத் துறையினர் கடந்த 18 ஆம் திகதி கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடத்திய கிளிநொச்சி மாவட்ட மட்டத்திலான ஓவியப் போட்டி முடிவுகள் வருமாறு,

**தரம் 4,5 பிரிவுகள்**

1 ஆம் இடம்-: செ.ஜேம்ஸ் கலையரசன்- (கிளி.தம்பிராசபுரம் மகா வித்தியாலயம்)

2 ஆம் இடம்-: இராசரத்தினம் சாளினி (கிளி. அ.த.க.பாடசாலை)

3 ஆம் இடம்-: பிரதீபன் கீர்த்தனா (கிளிநொச்சி மகாவித்தியாலயம்)

**"அழகெழல்" சிறப்புக்கேடயத்துக்குரியவர்கள்**

★ ப.நிந்தினி (கிளிநொச்சி மத்திய கல்லூரி)

★ இராசரத்தினம் தனஞ்சயன் (கிளி.உருத்திரபுரம் மகாவித்தியாலயம்)

★ இராசேந்திரன் மதுஷனன் (கிளிநொச்சி மகாவித்தியாலயம்)

**தரம் 6,7,8 பிரிவுகள்**

1 ஆம் இடம-: நாகராசா ஜெயசிறி (கிளிநொச்சி மகாவித்தியாலயம்)

2 ஆம் இடம்-: கருணாகரன் ரோஜிதன் (கிளி.முழங்காவில் மகா வித்தியாலயம்)

3 ஆம் இடம்-: கஜேந்திரன் சுதர்சன் (கிளிநொச்சி மத்தியகல்லூரி)

**"அழகெழல்" சிறப்புக்கேடயத்துக்குரியவர்கள்**

★ அனுசா தங்கராஜ் (கிளி.அக்கராயன் அ.த.க.பாடசாலை)

★ சோபிதா இரவீந்திரநாதன் (கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம்)

★ அடைக்கலன் நிசாந்தன் (கிளிநொச்சி பாரதி வித்தியாலயம்)

**தரம் 9,10,11 பிரிவுகள்**

1 ஆம் இடம்:- உதயசூரியன் அனுராஜ் (பூநகரி நல்லூர் மகாவித்தியாலயம்)

2 ஆம் இடம்:- எட்வின் குலராசா லக்ஸன் (கிளிநொச்சி மகாவித்தியாலயம்)

3 ஆம் இடம்:- நகுலேஸ்வரன் தினோஜன் (கிளி.திருவையாறு மகாவித்தியாலயம்)

**அழகெழல் சிறப்புக் கிண்ணம் பெறுவோர்**

★ ஆறுமுகநாதன் லோகன் (கிளி.பூநகரி மகாவித்தியாலயம்)

★ செல்வரட்ணம் சிவகணேசா (கிளி.மத்திய கல்லூரி)

★ எஸ்.ராகுலன் (கிளி.வட்டக்கச்சி மகாவித்தியாலயம்)

**உயர்தரப்பிரிவு**

1 ஆம் இடம்:- மரியதாஸ் விஜிதரன் (கிளி.உருத்திரபுரம் மகா வித்தியாலயம்)

2 ஆம் இடம் :- துரைராஜசிங்கம் மோகனசிறி (கிளி.பரந்தன் இந்து மகாவித்தியாலயம்)

3 ஆம் இடம்:- வி.திலீபன் (கிளிநொச்சி மத்திய கல்லூரி), கிருஸ்ணானந்தம் ஐங்கரன் (கிளி.உருத்திரபுரம் மகாவித்தியாலயம்)

**அழகெழல் சிறப்புக்கேடயத்துக்குரியவர்கள்**

★ வரதேவதாஸ் கவிதாஸ் (கிளி.உருத்திரபுரம் மகாவித்தியாலயம்)

★ சி.சுரேஸ் (கிளிநொச்சி இந்துக்கல்லூரி)

**ஆசிரியர் தரம்**

1 ஆம் இடம்:- திரு.நாகராஜா ஜெகதீஸ்வரன் (கிளி.பூநகரி ம.வி)

2 ஆம் இடம்:- ஆரோக்கியநாதன் டிரோசினி (கிளிநொச்சி மத்திய கல்லூரி)

3 ஆம் இடம்:- துரைச்சாமி நவரட்ணஜோதி (கிளி.அக்கராயன் ம.வி)

**அழகெழல் சிறப்புக்கேடயத்துக்குரியவர்கள்**

★ திருமதி செ.தெய்வேந்திரமூர்த்தி (கிளிநொச்சி மகாவித்தியாலயம்)

★ சரவணமுத்து சந்திரவதனி (கிளி.சிவநகர் அ.த.க.பாடசாலை உருத்திரபுரம்)

★ கருப்பையா கமலாதேவி (கிளி.பாரதி வித்தியாலயம்)

போட்டியில் 1ஆம், 2ஆம், 3ஆம் இடம் பெற்றவர்களுக்கு பணப்பரிசில்களும், வெற்றியீட்டிய அனைவருக்கும் சான்றிதழ்களும் வழங்கப் படும். பரிசளிப்புவிழா எதிர்வரும் மே மாதம் 7 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியில் நடைபெறும். (க)

# 1200 வெற்றிடங்களுக்கு ஒரு இலட்சம் விண்ணப்பம்

(கொழும்பு)

அமைச்சுக்களிலும் அரச திணைக்களங்களிலும் சுமார் ஆயிரத்து 200 வெறறிடங்கள் நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வெற்றிடங்களை நிரம்புவதற்கு துரித நடவடிக்கை எடுக் கப்படவுள்ளதாக பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் டி.திஸ்ஸ நாயக்க தெரிவித்திருக்கிறார்.

அண்மைக் காலமாக இந்த நிறுவனங்களில் எழுது வினைஞர்களுக்கு பற்றாக்குறை நிலவி வருகின்றது. அவ் வெற்றிடங்களுக்காக ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாகவும் பொது நிர்வாக அமைச்சு தெரிவிக்கன்றது. இவ்விண்ணப்பங்களில் தெரிவு செய்யப்பட்ட 2 ஆயிரத்து 500 பேர் எழுத்துப் பரீட்சைக் குத் தோற்றியுள்ளனர்.

எனினும் பெரும்பாலானோர் உரிய புள்ளிகளை பெறத் தவறியதால் புள்ளி வீதத்தை குறைத்து 600 பேரைத் தெரிவு செய்து நியமனங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளதாகவும் அமைச்சின் செயலாளர் தெரிவித்திருக்கிறார். (7-9)

# மரமுந்திரிகைச் செய்கை

அம்பன் கிராமத்தில் 20 ஏக்கர் நிலத்தில் செய்கை பண்ணப்பட்ட மரமுநதிரிகை தற்போது என்றுமில்லாதவாறு காயக்கத்தொடங்கியுள்ளது. அரசுக்கு சொந்தமாக ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகள் இருந்தும அவற்றை மக்களுக்கு வழங்கி ஊக்குவிப்புக் கொடுத்தால் இதன் மூலம் இப்பகுதி மக்கள பெரும் வருவாயை திரட்ட முடியும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

பலதடவை இது பற்றி அரச சார்பற்ற நிறுவனங்களுடன் பல அமைப்புகள தொடர்பு கொண்டும் எவ்வித பலனும் கிடைக்கவில்லை என்றும் அவர்கள தெரிவிக்கிறார்கள். (து-56)

# இன்று ஒரு தகவல்

## பிரம்ம ஞானம்

முற்காலத்தில் வசிட்டர் என்று ஒரு முனிவர் இருந்தார். கேள்விப்பட்டடிருப்பீர்கள். அவர் மற்றவர்கள் போல் சாதாரண முனிவர் அல்ல. பிரம்ம ரிஷி! ஒருவருக்கு பிரம்மஞானம் வந்து விட்டால் அதன் பின் அவரை பிரம்ம ரிஷி என்றழைப்பார்கள். அந்த ஞானம் அவ்வளவு சுலபமாக எல்லோருக்கும் வந்துவிடாது. அதை அடைய விசுவாமித்திரரே எவ்வளவு பாடுபட்டிருக்கி றார் தெரியுமா?

"நானும் பிரம்ம ஞானத்தைப் பெறவேண்டும்! என்னையும் எல்லோரும் பிரம்ம ரிஷி என்று மதிக்கவேண்டும்". இப்படி ஒரு ஆசை விசுவாமித்திரருக்கு. அதற்கு என்ன வழியென யோசித்தார். நேராகக் காட்டுக்குப் போனார். கடுமையாக தவம் செய்யத் தொடங்கினார். கொஞ்ச நாட்கள் போயின திடீரென் ஒரு நாள் அவர்தான் பிரம்ம ஞானம் அடைந்து விட்டதாக நினைத்தார்.

உடனே அவர் வசிட்டரிடம் போய் அவரை வணங்குவதற்கு முடிவெடுத்தார். அவரிடம் போனால் தனக்கு பிரம்ம ஞானம் வந்து விட்டதா இல்லையா என்பதைப் புரிந்து கொள்ளலாம். எப்படித் தெரியுமா?

அதற்கு ஒரு வழியிருக்கிறது. முற்காலத்தில் ஒருவரை ஒருவர் வணங்குவதற்கு சில சம்பிரதாயங்கள் இருந்தன. ஒரு பிரம்ம ரிஷியை இன்னொருவர் வணங்குகிறார் என்றால், வணங்க வந்தவர் தமக்கு சமமாக பிரம்மஞானம் அடைந்தவாராக இருந்தால் பிரம்ம ரிஷியும் பதிலுக்கு அவரை வணங்கலாம். இல்லாவிட்டால் பிரம்ம ரிஷி தமது கைகளை உயர்த்தி ஆசீர்வாதம் செய்யவேண்டும் அவ்வளவுதான்.

இதை மனதில் வைத்துக் கொண்டுதான் விசுவாமித்திரர் வசிட்டர் இருக்கும் இடத்தைத் தேடிச்சென்றார்.

அவரைச் சென்று வணங்குவோம் அவரும் பதிலுக்கு வணங்கினால், எனககு பிரம்மஞானம் வந்துவிட்டது என்பது உறுதியாகிவிடும் என்று எண்ணினார். வசிட்டரின் ஆச்சிரமத்தை சென்றடைந்தார் விசுவாமித்திரர். அவரை வணங்கினார். ஆனால் வசிட்டர் பதிலுக்கு இவரை வணங்கவில்லை கையைத் தூக்கி ஆசீர்வாதம் மட்டுமே பண்ணினார்.

விசுவாமித்திரருக்கோ கோபம் வந்து விட்டது. இவ்வளவு கடுமையாகத் தவம் பண்ணியும் இவர் நம்மை பிரம்மரிஷியாக ஏற்றுக்கொள்ள மறுக்கிறன்றாரே எனக்கோபம் கொண்டார்.

திரும்பி வந்து, மறுபடியும் தவம் பண்ண ஆரம்பித்தார். ஒரு நாள் திடீரென அவரது இஷ்ட தெய்வம் அவர்முன் வந்து காட்சியளித்தது.

"விசுவாமித்திரா! நீ போய் வசிட்டரை வணங்கு! அவர் பதிலுக்கு உன்னை வணங்காவிட்டால் உடனே அவர் தலை சுக்கு நூறாக வெடிக்க வேண்டுமென்று சாபம் கொடுத்துவிடு" என்று சொல்லிவிட்டு மறைந்து விட்டது.

உடனே விசுவாமித்திரர் வசிட்டரிடம் போனார் மறுபடியும் அவரை வணங்கினார். அவரும் முன்பு போலவே கைகளைத் தூக்கி ஆசிர்வாதம் பண்ணினார்.

விசுவாமித்திரருக்கோ கடுமையான கோபம். ரஜோ குணத்தின் வேகம் அவருக்கு அதிகமானது. இவ்வளவு தவம் பண்ணியும் என்னை அங்கீகரிக்காத உங்களையும் உங்களைச் சேர்ந்தவர்களையும் என்ன செய்கிறேன் பாருங்கள்!என்று பொங்கி எழுந்தார். ஆனால் அந்நேரத்தில் அவரிடம் திடீரென ஒரு மாற்றம்; இவ்வளவு காலமும் அவர் பண்ணின தவம் எல்லம் சேர்ந்து நல்ல எண்ணங்களை ஏற்படுத்தியது. அவர் யோசித்தார்.

"சரி இவர் நம்மை பிரம்ம ஞானியாக ஏற்றுக்கொள்ளாவிட்டால் என்ன? நான் எதற்காக இவ்வளவு கோபப்பட வேண்டும்? கோபத்தால் புத்தி தடுமாறி சாபம் கொடுக்க நினைத்தேனே! கோபம் பொறாமை அடுத்தவர்களுக்கு கெடுதல் நினைப்பது...

இது மாதிரியான குணம் சராசரி மனிதனுக்கு வரலாம். இவ்வளவு காலமும் தவம் பண்ணின எனக்கு வரலாமா,? என்னுடைய மனதில் இன்னமும் இம்மாதிரியான் கெட்ட எண்ணங்கள் இருக்கிறதே. அப்படி இருக்கும் போது பிரம்ம ஞானம் எனக்கு வந்து விட்டதென எப்படிச் சொல்ல முடியும்?" என்று நினைத்தார்.

"உண்மையான தவம் என்றால் என்ன? மற்றவர்களுக்கு கெடுதல் செய்யும் எண்ணமே வரக்கூடாதல்லவா? நான் எவ்வளவு மோஷமானவனாக மாறிவிட்டேன். என்னிடம் இருக்கும் அதே ஆத்மாதானே மற்ற உயிர்களிடமும் இருக்கும்" என்று நினைத்தார். வெட்கத்துடன் தலை குனிந்தபடி திரும்பி நடக்க ஆரம்பித்தார் விசுவாமித்திரர்.

"கொஞ்சம், நில்லுங்க முனிவரே!" என ஒரு குரல் கேட்டது திரும்பிப் பார்த்தார் விசுவாமித்திரர்.அங்கே வசிட்டர் வந்து கொண்டிருந்தார். "ஏன் ?" என்பது போல் இவர் அவரைப்பார்த்தார்.

"கொஞ்சம் நில்லுங்க... நான் உங்களை வணங்க வேண்டாமா? உங்களை வணங்கி நான் உங்கள் வணக்கத்தை ஏற்றுக் கொள்கிறேன். உங்களுக்கு பிரம்ம ஞானம் வந்துவிட்டது" என்றார். தொடர்ந்து வசிட்டர் சொன்னார் "பிரம்ம ரிஷியே! முதலில் உன்னிடம் இருந்த ரஜோகுணம் நீங்கி சுத்த சத்துவ குணம்வந்துவிட்டது. அந்த ஒளி இப்போது உங்கள் முகத்திலே தெரிகிறது. நீங்கள் உண்மையாகவே பிரம்ம ஞானி தான்" என்றார்.

வசிட்டர் தன் வாயாலேயே "பிரம்மரிஷி" என்று சொல்லி விட்டார். வேறென்ன வேண்டும் விசுவாமித்திரருக்கு? அந்தக் காலத்தில் வசிட்டர் வாயாலே அவர் "பிரம்மரிஷி" என்று அவர் பட்டம் வாங்கின மாதிரி இந்தக் காலத்திலேயும் கடுமையான முயர்சிகள் பண்ணி நானும் பட்டம் வாங்கி இருக்கிறேன் என் றார் ஒரு குடும்பஸ்தர்.

அப்படியானால் "வசிட்டர் யார்" என்று கேட்டேன் 'என் வீட்டுக் காரி தான்" என்றார். "அப்படி அவர் வாயாலே என்னதான் சொன்னார்?" என்றேன். 'ரொம்ப நாளைக்குப் பிறகு இன்று தான் சொனனர்" என்றார். "என்ன சொன்னார்? அதை முதலில் சொல்லுங்கள்" என்றேன். "சாம்பாருக்கு நான் போட்ட உப்பு அளவாக இருக்கு என்று சொல்லி விட்டார் " என்றார் பெருமிதத்துடன்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# புனர்நிர்மாண செயற்திட்டங்களில் திருப்தியடைய முடியாதுள்ளது

## அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே

(கொழும்பு)

ஆழிப்பேரலைகளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணம் வழங்கும் செயற்திட்டம் தொடர்பாக திருப்தியடைய முடியாதென வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்திருக்கிறார்.

காலியில் அண்மையில் இடம்பெற்ற மதவழிபாட்டு நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

ஆழிப்பேரலை நிவாரண நடவடிக்கையில் ஈடுபடும் அரசாங்க ஊழியர்களின் செயற்திறனின்மையே இந்த நிலைக்குக் காரணம்.

அரசாங்கம் என்ற ரீதியில் இந்த நடவடிக்கைகள் திருப்திகரமானவையாகக் காணப்படவில்லை.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட புனர்நிர்மாண நடவடிக்கைகளைப் பார்க்கும் போது திருப்தியடைய முடியாது.

எனினும் சுனாமியில் சிக்கியது ஒரு கிராமமோ அல்லது இரண்டு கிராமங்களோ இல்லையென்பதை அனைவரும் நினைவில் கொள்ளவேண்டும்.

14 மாவட்டங்களில் அதிகளவிலான வீடுகள் அழிவடைந்துள்ளன. ஆயிரக்கணக்கில் உயிரிழப்புகள் ஏற்பட்டன. வியாபார நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன. இவற்றைக் கட்டியெழுப்புவதற்கான பொறுப்புகள் அதிகாரிகளிடம் வழங்கப்பட்டுள்ளன.

ஆனால் இந்த அதிகாரிகள் பல குறைபாடுகள் உள்ளவர்களாகக் காணப்படுகின்றனர்.

உதாரணமாக 100 மீற்றருக்குள் வசித்த சில குடும்பங்களுக்காக 165 வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கான காணியைப் பெற ஒன்றரை மாத காலமாக முயற்சித்து வருகின்றேன்.

ஆயினும், அரசாங்க அதிகாரிகள் காணியை வழங்குகிறார்கள் இல்லை. இவ்வாறான அதிகாரிகள் இருக்கும் வரை, அதாவது நத்தை போல் ஊர்ந்து செயற்படும் அதிகாரிகள் இருப்பதனாலேயே புனர்நிர்மாணப் பணிகளில் எவ்வித முன்னேற்றமில்லாத செயற்பாடுகள் காணப்படுகின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (7-8)

# சுனாமி நிவாரணத்திற்கு கட்டுப்பாடுகள் விதிப்பதற்கு அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

சுனாமிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரச வங்கிகளினால் வழங்கப்பட்டு வந்த நிவாரணக் கொடுப்பனவு தொகை இனிமேல் அத்தியாவசியமாக நிவாரணம் தேவைப்படும் குடும்பங்களுக்கு மாத்திரமே வழங்கப்படவுள்ளதாக அரச உயர்மட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுனாமிப்பேரலையால் பாதிக்கப்பட்ட 2 இலட்சம் குடும்பங்களுக்கு இதுவரை மாதாந்தம் 5,000 ரூபா வீதம் அரச வங்கிகளினால் வழங்கப்பட்டு வந்தன. இதுவரை இந்த நிவாரணக் கொடுப்பனவு எவ்விதப் பாகுபாடுமின்றி பாதிக்கப்பட்ட அனைத்துக் குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டு வந்துள்ளது.

இவ்வாறு நிவாரணம் பெறுபவர்களிடையே, அரச ஊழியர்கள்,வியாபாரிகள் மற்றும் வேறு தொழில் செய்வோர் என அனைத்துத் தரப்பினரும் உள்ளதாகத் தெரிய வந்ததையடுத்து நிவாரணம் அத்தியாவசியமாகத் தேவைப்படுபவர்கள் யார் என்பதைக் கண்டறிய அரசாங்கம் ஆய்வொன்றை நடத்தவுள்ளது.

இதற்கமைய தமது வீடுகளை முற்றாகவோ அரைவாசியாகவோ இழந்தவர்கள் மற்றும் தமது தொழில்களை இழந்தவர்கள், வாழ்க்கையைக் கொண்டு நடத்த வழியற்றவர்கள் ஆகியோருக்கே இந்த மாதாந்தக் கொடுப்பனவான 5,000 ரூபா வழங்கப்படவுள்ளது.

இதன்மூலம் மாதாந்தம் 5,000 ரூபா நிவாரணத் தொகையைப் பெறும் குடும்பத்தின் எண்ணிக்கையை 1 இலட்சத்து 25 ஆயிரமாகக் குறைக்க முடியும் என அரசு நம்புவதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.(க)

# அமெரிக்க யுத்தக் கப்பல் இன்று கொழும்பு வருகிறது

(கொழும்பு)

அமெரிக்காவினால் இலங்கைக் கடற்படைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட கடலோரக் காவல்படையான 'கரேஜஸ்' போர்க்கப்பல் இன்று செவ்வாய்க்கிழமை கொழும்புத்துறை முகத்தை வந்தடையவுள்ளது.

அமெரிக்காவினால் தேவையற்ற ஒன்றாகக் கருதி ஒதுக்கிவைக்கப்பட்டிருந்த இந்தக் கப்பலை புனரமைத்து, திருத்தும் பணிகளுக்காக மாத்திரம் இதுவரை 67 கோடி 60 இலட்சம் ரூபாவை இலங்கை அரசு செலவிட்டிருக்கிறது.

இநதக் கப்பலில் சுடுகலன்களை பொருத்தும் செயற்பாடுகள் குறித்து முழுமையான கவனஞ் செலுத்திவரும் அமெரிக்கா, சீனத் தயாரிப்பிலான 30 மில்லிமீற்றர் ஏவுகணைகளை இந்தக் கப்பலில் பொருத்தக் கூடாதென்று நிபந்தனையை விதித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கோடிக்கணக்கிலான பணம் செலவழிக்கப்பட்டு இந்தக் கப்பலில் திருத்தப் பணிகள் இடம்பெற்றாலும் ஆகக்கூடியது அடுத்த 12 ஆண்டுகளுக்கு மட்டுமே இந்தக் கப்பலை பயன்படுத்த முடியுமென்று பாதுகாப்புத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன. (க)

# தகராற்றை தீர்க்க தன்பணத்தில் 5000 ரூபாவைக் கொடுத்த ஆசிரியர்

(துன்னாலை)

மின் இணைப்பு வயரில் ஏற்பட்ட பழுது காரணமாக மின்சாரசபை ஊழியர்கள் திருத்த வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது அவ்வழியே வந்த மோட்டார் சைக்கிளொன்று விபத்துக்குள்ளானது.

கரவெட்டி கோவிற் சந்தைப் பகுதியில் கடந்த செவ்வாயன்று நடைபெற்ற இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது,

ஓய்வுபெற்ற ஆசிரியர் ஒருவரின் வீட்டின் மின்னிணைப்பு வயர் பழுதடைந்த காரணத்தால் அதனைத் திருத்த வந்த மின்சாரசபை ஊழியர்கள் இருவர் மின் கம்பத்தில் இணைப்பதற்காக வயரை இழுத்த போது பிரதான வீதியால் வந்துகொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று வயரில் சிக்கி விபத்துக்குள் ளானது.

ஓட்டுநருக்கு இதனால் காயமெதுவும் ஏற்படாத போதிலும் மோட்டார் சைக்கிளின் சில பாகங்களுக்கு உடைவு ஏற்பட்டது.

இதனால் மோட்டார் சைக்கிள் ஓட்டுநருக்கும் மின்சாரசபை ஊழியர்களுக்குமிடையே காரசாரமான விவாதம் ஏற்பட்ட போது மின் இணைப்பு வேலை நடைபெற்ற வீட்டின் சொந்தக்காரரான ஓய்வுபெற்ற ஆசிரியர் இரு பகுதியினரையும் சமரசம் செய்ததோடு மோட்டார் சைக்கிளில் ஏற்பட்ட சேதங்களைத் திருத்த தனது சொந்தப் பணத்தில் ரூபா 5ஆயிரம் ரூபா கொடுத்துப் பிரச்சினையைத் தீர்த்து வைத்தார். (து-101)

# மட்டக்களப்பில் கடும் வறட்சி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுனாமி அனர்த்தத்தின் பின்னர் தற்போதுகடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக கிணறுகள், குளங்கள், வாய்க்கால்கள், நீரோடைகள் ஆகியன வற்றி வருகின்றமையினால் இப்பிரதேசத்தில் குடிநீருக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

வறட்சியின் காரணமாக கால்நடைகளும் அவதியுறுகின்றன. புல்லினங்கள் கருகி விட்டதால் ஆடு மாடுகள் மேய்ச்சல் இன்றி அலைவதாகவும் இதனால் பால் உற்பத்தி வீழ்ச்சி அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நீரோடைகள், வாய்க்கால்கள் வற்றி வருவதனால் பயிர்ச்செய்கைகள் மரக்கறி உற்பத்திகள் போன்ற வற்றிற்கான நீரைப் பொறுவதிலும் விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றார்கள்.

வெப்பம் அதிகரிப்பதினால் மக்கள் பகல் நேரங்களில் வெளியில் வரமுடியாமல் வீடுகளுக்குள்ளேயே முடங்கிக் கிடக்கின்றமையையும் காணக்கூடியதாக உள்ளது. (க-9)

# திருட்டு மின் பாவனையை கட்டுப்படுத்த கண்காணிப்பு

(பருத்தித்துறை)

பருதித்துறைப் பிரதேசத்தில் அதிகரித்து வரும் திருட்டு மின்சாரப் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கான துரித நடவடிக்கைகளை இலங்கை மின்சார சபை பருத்தித்துறை அலுவலகத்தினர் பொலிஸாருடன் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர்.

இரவு வேளைகளில் உதவி மின் பொறியியலாளர் எஸ். செல்வச்சந்திரன் தலைமையிலான மின்சார சபை உத்தியோகத்தர்கள் குழு பொலிஸாரின் உதவியுடன் திருட்டு மின் பாவனையாளர்கள் மீது கடும் கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது.

இவ்வாறு இக் குழுவினரின் திடீர் கண்காணிப்பின் போது இரு தடவைகளில் 15 திருட்டு மின் பாவனையாளர்கள் சிக்கிக் கொண்டனர்.

இத் திருட்டு மின் பாவனையாளர்கள பருத்தித்துறைப் பொலிஸாரினால் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து ஒவ்வொருவருக்கும் தலா 20 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. திருட்டு மின் பாவனைக்குப் பயன்படுத்தப்பட்ட மின் உபகரணங்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

மேலும் இக்குழுவினர் தொடர்ந்தும் திருட்டு மின் பாவனையாளர்களைக்கண்டு பிடிப்பதற்குத் தீடீர் சோதனைகளை மேற்கொள்ளவுள்ளதாக உதவி மின் பொறியியலாளர் செல்வச்சந்திரன் தெரிவித்துள்ளார்.(7,52)

# தேசத்தை பாதுகாக்கும் புலனாய்வுப் பணியில் "மனித உரிமை மீறல்கள்" சாதாரணமானவையே

உலகப் புலனாய்வு ஒழுங்கில எந்த எந்த நாடுகளின் புலனாய்வு நிறுவனங்களாலும் சரி தமது நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் எவற்றையும் அவை மனிதாகளானாலும் சரி அவர்களின் அடிப்படை மனித உரிமைகளை அறவே மதிப்பதில்லை. தத்தமது நாடுகளுக்கு எதிராக எவரெவர் செயற்படுகின்றார்களோ அவர்களை அழித்தொழிப்பதற்கு உலகின் எந்தப்புலனாய்வு நிறுவனங்களும் தயங்குவதில்லை. இதைத்தான் உலகப் புலனாய்வு வரலாறுகள் எடுத்தியம்புகின்றன.

தேசத்தை பாதுகாக்கும் புலனாய்வு பணியில் மனித உரிமை மீறல்கள் பாரதூரமான விடயம் அல்ல. எல்லாப் புலனாய்வு நிறுவனங்களினது நாளாந்தச் செயற்பாடுகளிலும் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுகின்றன.

தேசியப்பாதுகாப்பு நலன் கருதி இவை ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கின்றன. தமிழர் தாயகத்தில் தமிழர்களின் தேசிய சுதந்திரத்திற்காகவும் விடுதலைக்காகவும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் 34 வருடங்களாக ஆயுதம் தூக்கிப் போராடி 18 ஆயிரம் தமிழர் படைவீரர்களும் வீரகாவியமாகிவிட்டார்கள். இது ஒரு தேசத்தின் தேசியப் போராட்டமாக விரிவாக்கம் பெற்றுவிட்டது.

மனித உரிமை மீறல்கள் என முழங்குபவர்கள் யார்? இவர்களின் பின்னணி என்ன? இவர்களுக்கும் அரசுக்குமான உறவு என்ன? என்பன பற்றி தமிழர்கள் ஆராயவேண்டும். அரச சார்பற்ற நிறுவனங்கள் புலனாய்வு நிறுவனங்களின் நிழல் நிறுவனங்களாக செயற்பட்டுக் கொண்டு மனித உரிமைகள் பற்றி பேசுகின்றன. மனித உரிமைகள் பற்றி அலட்டிக்கொள்ளும் உலக நாடுகளும் தத்தமது நாடுகளின் தேசிய பாதுகாப்பு நலன் கருதி தேசத் துரோகிகளின் அடிப்படை மனித உரிமைகளை 'மதிக்கின்றதா? மதித்ததா? மதிக்குமா? என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

அமெரிக்காவின் உளவுத் துறை சி.ஐ.ஏ. இந்தியாவின் உளவுத்துறை றோ, இஸ்ரேலின் உளவுத்துறை மெசாட், ரஷ்யாவின் உளவுத்துறை தே.ஜி.பி. பிரிட்டன் உளவுத் துறை ஆ.ஐ-6, பிரான்சின் உளவுத்துறை டி.ஜி.எஸ். ஜேர்மன் உளவுத்துறை டி.எஸ்.டி. ஜப்பான் உளவுத்துறை மெய்ஜி போன்ற பிரசித்திபெற்ற உளவுத்துறைகளில் எது தனது எதிரிகளின் அல்லது துரோகிகளின் விடயத்தில் மனித உரிமைகளை மதிக்கின்றது. இவை எல்லாமே ஈவிரக்கமின்றியும் மனிதாபிமானமின்றியும் தேச விரோதிகளை தீர்த்துக் கட்டுகின்றன என்பது புலனாய்வு சரித்திரத்தில் பதியப் பட்டிருக்கின்றது.

புலிகளின் உளவுத்துறை தமிழ் தேசத்தின் பாதுகாப்பு நலன்கருதி தமிழர் தேசத்தை அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்பவர்கள் மீது மேற்கொள்ளும் புலனாய்வு நடவடிக்கைகளை சிலர் கண்டிப்பதில் நியாயம் உண்டா? நிச்சயமாக இல்லை. மனித உரிமைகள் பற்றி பேசுகின்றவர்கள் முதலில் தத்தமது நாடுகளின் புலனாய்வு நிறுவனங்களுடைய செயற்பாடுகளுக்கு தீர்வை கண்டுவிட்டு பின்னர் தமிழர் தேசத்தின் விடுதலைக்காக போராடும் விடுதலைப் புலிகளின் புலனாய்வுத் துறை மேற்கொள்ளும் தேச விரோதிகள் மீதான மனித உரிமை மீறல்கள் பற்றி பேசவேண்டும்.

'மாற்றுக் கொள்கை' என்பது புனிதமான சொற்தொடர். இது அவசியம் தேவையானது. ஆனால் மாற்றுக் கொள்கை என்று கூறிக்கொண்டு எதிரி நாட்டுப்படைகளுடன் துணைப் படையாக செயற்படுபவர்களை மாறறுக் கொள்கை உடையவர்கள் என்று கூறமுடியாது. இவர்களை இன விரோதிகள் என்று தான் கூறவேண்டும். தமிழருக்காக குரல் கொடுக்க வேண்டுமானால் தமிழர்களுடன் மாற்றான் படையுடன் இணைந்து செயற்பட்டுக்கொண்டு மாற்றுக் கொள்கை என்று கூறுவது மற்றவர்களை முட்டாளாக்கும் செயலாகும். தேச விரோதிகள் தமிழர் தேசத்திற்கு எதிராக பணத்திற்கும் சலுகைக்கும் பட்டத்திற்கும் அடிமையாகி எதிரிக்கு கூலிக்கு வேலை செய்கின்றார்கள். இவ்வாறாக உலக நாடுகளிலும் பலர் செயற்பட்டிருக்கின்றார்கள்.

சி.ஐ.ஏ. ஈராக் விடயத்தில் சந்தேகத்தின் பேரிலேயே ஆயிரக்கணக்கானவர்களின் மனித 'உரிமைகளை மதிக்காமல் கைது செய்தது. அவர்களை புலனய்வு விசாரணை நடவடிக்கை என்ற பெயரில் படுகொலைகள், சித்திரவதைகள் செய்தது. எப்படி எப்படி எல்லாம் ஈராக்கிய மக்களை அமெரிக்கா சிப்பிலியாட்டியது? இது இன்றும் தொடர்கிறது. இதில் வெளித் தெரிய வந்தவை சில தான். வெளித்தெரியவராத மனித உரிமை மீறல்கள் இன்னும் எத்தனையோ இருட்டறையில் உள்ளன.

இஸ்ரேலிய மொசாட் பலஸ்தீனத்தை சீரழிப்பதற்கு எப்படி, எப்படியான சூழ்ச்சிகளையும் நாச வேலைகளையும் செய்கிறது. பாலஸ்தீன யூதமக்களின விடுதலையையும் வாழ்வையும் வளத்தையும் சீரழித்தும் சுரண்டியும் தன்னை வளப்படுத்திக் கொள்ள இஸ்ரேல் உளவுத் துறை மேற்கொள்ளும் சாகச விளையாட்டுக்களும் மனித உரிமை மீறல்கள் பற்றியும் எவரும் அலட்டிக்கொள்ளாமல் இருப்பது ஏன்? றோவின் (இந்தியாவின்) உயர் பதவியில் இருந்த அதிகாரி ஒருவர் அண்மையில் அமெரிக்காவின் சி.ஐ.ஏ. நிறுவனத்துடன் இணைந்து கொண்டார். அந்த அதிகாரி பணத்திற்கு அடிமையாகிவிட்டார். இந்தியாவுக்கு அவர் தேசத்துரோகம் செய்துவிட்டார். இவரை இந்திய உளவுத்துறை விட்டு வைக்குமா?

அரச நட்புக்காகவும் அரசியல் இலாபங்களுக்காகவும் சுயலாபங்களுக்காகவும் சந்தர்ப்பவாத போக்குடையவர்கள் விடும பக்கச்சார்பான விமர்சன கருத்தறிக்கைகளே இவையாகும். இவர்களின் கண்டன அறிக்கைகளை கருத்தில் எடுத்தால் தமிழ் தேசத்தின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும். உலகின் பெரும்பாலான உளவு நிறுவனங்களின் நடவடிக்கைகள் ஈவிரக்கமற்றதாக இருக்கும அதேவேளை, வெளிப்படையான அரசியலில் யதார்த்தத்திற்கு எதிர்மாறானதாகவும் இருககும் என கேணல் வில்லியம் கெனடி குறிப்பிடுகின்றார். இதிலிருந்து அரசியல் நகர்வு வேறு புலனாய்வு நகர்வு வேறு என்பது புரியும். புலனாய்வு நகர்வுகள் தேசத்தின் நிலையான கொளகையின்படி நகரும். அரசியல் நகர்வுகள் காலத்திற்கு ஏற்ப வேறுபடும்.

ஒரு காலத்தில் இந்தியாவும் அரசயல் இராஜதந்திர ஆலோசகரான கோடிலியக் அல்லது சாணக்கியர் என்பவர் அரச புலனாய்வுக்கொள்கை பற்றிக் குறிபபிடும்போது நாட்டின் தேசிய பாதுகாப்பு நலன் கருதி நேர்மையான வழிமுறைகளை மட்டும் அன்றி குறுக்கு வழிகளிலும் புலனாய்வு செயற்பாடுகள் மேற்கொள்ளலாம் அதில் எதிரிகளின் துரோகிகளின் மனித உரிமைகள் பற்றி சிந்திக்கத் தேவையில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடுகள் மறைமுகமாக தமக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல்களில் இருந்து தம்மை பாதுகாத்துக் கொள்வதற்காகவும் அதே வேளை போட்டி நாடுகளுக்கும் மறைமுக அச்சுறுத்தலை கொடுப்பதற்காகவும் புலனாய்வுச செயற்பாடுகள் மேற்கொள்கின்றன. மறைமுகமான புலனாய்வு நடவடிக்கைகளை எந்த உளவு நிறுவனமும் உரிமை கோருவதோ ஒப்புக்கொள்வதோ இல்லை. இதற்கான காரணம் மறைமுக நடவடிக்கைகள் அநேகமானவை நாடுகளின் சட்ட வரம்புகளையும் இறைமையினையும் மீறுவதாக குற்றச் செயல் போன்று தோற்றம் அளிப்பதாலும் இதனால் அபகீர்த்தியும் அழுத்தங்களும் ஏற்படும் என்பதாகும். எனவே அவற்றில் இருந்து தப்பித்துக் கொள்ள இவ்வகை நடவடிக்கைகளை எந்தப் புலனாய்வு நிறுவனமும் உரிமை கோருவதில்லை. ஆனால இது இடைவிடாது தொடர்ந்த வண்ணம் இருக்கும்.

நாடுகளின் அரசியல் பீடங்கள் எதிரி நாடுகளுடன் அல்லது சக்திகளுடன் அரசியல் நோக்கு இராஜதந்திர நட்புறவு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. சமரச வழியில் தமது கொள்கைக்கு உடன்படவைக்க முயல்கன்றன. ஆனால் புலனாய்வு நிறுவனங்கள் அவ்வாறான வழிக்குச் செல்வதில்லை. அவை தம் தேசத்தின் பாதுகாப்பு நலன கருதி அழித் தொழிப்பு வழிமுறைகளையே கையாளும்.

அரசயல் பீடங்கள் ஜனநாயக வழியில் பகைவர்களை வசைப்படுத்த முயல்வார்கள் மாறாக புலனாய்வு நிறுவனங்களிடம் எதிரிகள் அல்லது துரோகிகள் விடயத்தில் ஜனநாயகத்தை அணுவளவும் காண முடியாது. இங்கு சர்வாதிகார முறைதான் நாட்டின் பாதுகாப்பு நலனை கருத்தில கொண்டு மேற்கொள்ளப்படும். இதனை எல்லாத் தேசங்களின் இராணுவப் புலனாய்வு நிறுவனங்களும் வழமையாக கையாளுகின்றன.

உளவு பார்ப்பதற்கெதிராக உலகமெங்கிலும் கடுமையான சடடங்களை எல்லா அரசுகளும் உருவாக்கி வைத்திருக்கின்றன. தத்தமது நாடுகளில் ஊடுருவி உளவு பார்ப்பவர்களுக்கும் புலனாய்வு நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கும் அது உறுதிப் படுத்தப்பட்டால் எல்லோரும் மரண தண்டனைகளையே நிறைவேற்றுகின்றனர்.

புலனாய்வு நடவடிக்கைகளுக்கு எதிராக சட்டங்களை இயற்றி வைத்துக்கொண்டு அவாகளே எதிரி தேசங்களுக்கு ஊடுருவி புலனாய்வு செயற்பாடுகளிலும் நடவடிக்கைகளிலும் ஈடுபடுவது இன்றைய உலகின் வழமையாகிவிட்டது. எதிரி தேசங்கள் மீதான புலனாய்வு நடவடிககைகள் எழுதப்படாத சட்டங்களாகவும் எல்லோராலும் அங்கிகரிக்கப்பட்டதொன்றாகவும் உள்ளன. இவ்வாறான சூழலில் எவரும் எவர் மீதும் குற்றம் சுமத்த தகுதியறறவர்களாகிவிட்டனர்.

**நன்றி இணையத்தளம்**

உலகப் புலனாய்வு நிறுவனங்கள் தத்தமது தேசங்களில் தேசிய பாதுகாப்பு நலன்கருதி ஒருபோதும் மனித உரிமைகளை மதித்து நடந்ததாக வரலாறு இல்லை.

இந்நிலையில் விடுதலைக்காக போராடும் எந்த அமைப்பும், புலனாய்வு நிறுனங்கள் தமது எதிரிகளின் மனித உரிமைகளை மதிக்க வேண்டுமெனக் கோருவது எந்த வகையிலும் நியாயமற்றது.

# விடுதலைப் புலிகளை ஜனநாயக வழிக்கு கொண்டு வருவதே எமது இலட்சியம்

## என்கிறார் ஜனாதிபதி

நோர்வே நாட்டின் அனுசரணையுடன். பொதுக்கட்டமைப்பினை ஏற்படுத்துவதில் சாதகமான சூழ்நிலை ஏறபட்டுள்ளது. அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகளை ஜனநாயக வழிக்கு கொண்டுவருவதற்கும் பொதுக்கட்டமைப்பே சிறந்த வழியாகவுள்ளது.

அதுமட்டுமன்றி தமது இலட்சியமும் தமிழீழ விடுதலைப் புலிகளை ஜனநாயக வழிக்கு கொண்டுவருவதே. இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்காது விட்டால் வெளிநாட்டு உதவிகளை நாம் பெறமுடியாது.

எனவே, விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு பொதுக்கட்டமைப்பு சிறந்ததொரு வழியாகும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சுனாமி அனர்த்தத்தினால் நாட்டுக்கு பேரிழப்பு ஏற்பட்டிருந்த போதிலும் அவற்றை மீறி நாட்டைக கட்டியெழுப்பும் வகையில் நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடைந்து வருகின்றது என்றும் அரசாங்கத்தின் மீது சர்வதேச சமூகம் கொண்டுள்ள நம்பிக்கை காரணமாக அவாகளது உதவியுடன் நாட்டு மக்களுககு சிறப்பானதொரு எதிர் காலததை வழங்கமுடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-4)

## பாதுகாப்பு அணைஅமைக்க 240 கோடி ரூபா தேவை

(பருத்தித்துறை)

வடமராட்சி பிரதேசத்தில் தொண்டைமானாறு தொடக்கம் குடத்தனை பொற்பதி வரையான கடலோர பாதுகாப்பு அணையை அமைப்பதற்கு 240 கோடி ரூபா தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது.

தென்பகுதியிலிருந்து கருங்கற்கள் தருவிக்கப்பட்டே இவ் அணையை அமைக்க முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-35)


## அரசிற்கு எதிராக ஐ.தே.க. ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சியமைத்து ஒருவருடம் நிறைவடைகின்ற போதிலும் நாட்டு மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை அது நிறைவேற்றாமையை கண்டித்து நாடு முழுவதும் தொடர்ச்சியான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்த பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய கட்சி தீர்மானித்துள்ளது.

அதன்படி மேல் மாகாணத்தில் நடத்தப்படவுள்ள எதிர்ப்பு ஆர்பபாட்டங்கள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் ஐந்தாழ் திகதி பிற்பகல் கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்தில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக அக்கட்சி தெரிவித்துள்ளது. (க-8)

## கடற்கன்னி கரை ஒதுங்கியது



சுனாமி அனர்த்தத்தின் போது இந்தியாவின் மெரினா கடற்கரையில் அதிசயமான சடலம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. மக்களின் காட்சிக்காக எக்மோர் அருங்காட்சியகத்தில் மிகுந்த பாதுகாப்புக்கு மத்தியில் வைக்கப்பட்டுள்ளது.


இதை சில தமிழ் ஆய்வாளர்கள் கடல்கன்னி என கூறுகின்றார்கள். (க)

# மீள்பார்வை

## பிரியானி விஜேசேகர எழுதிய

# இலங்கையில் பாராளுமன்ற வழக்கம்

(தமிழாக்கம் : ஆர்.எஸ். வேதநாயகம்) 21



**அத்தியாயம் VIII**

*முழுப்பாராளுமன்றக் குழு*

இரண்டாம் மதிப்பீட்டின் மீதான வாக்கெடுப்பைத் தொடர்ந்து ஒரு சட்டமூலம் ஒன்றில் முழுப் பாராளுமன்றக் குழுவுக்கு இன்றேல் சட்டமூலங்கள் பற்றிய ஒரு நிலையியற் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படலாம். முழுப் பாராளுமன்ற குழுவில் சட்ட மூலமொன்று மிக விரைவாக நிறைவேற்றப்படலாமென்பதால் பெரும்பாலும் அரசாங்கச் சட்டமூலங்களை அக்குழுவுக்கு ஒப்படைப்பதுதான் வழக்கம். முழுப்பாராளுமன்றக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படாத அரசாங்கச் சட்ட மூலங்களில் மனித உரிமைகள் ஆணைக்குழு உரித்துப் பதிவுசெய்தல் சட்டமாக நிறைவேற்றப்படாத 2001 இன் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டமூலம் என்பவை அடங்கும்.

குழுவில் சட்டமூலம் ஒவ்வொரு வாசகமாகப் பரிசீலனை செய்யப்படுவதுடன், திருத்தங்கள் எவையேனுமிருப்பின் அவையும் அறிமுகப்படுத்தப்படுகின்றன. ஒவ்வொரு வாசகமும் தனிவேறான ஒரு முன்மொழிவாகப் பிரேரிக்கப்பட்டு அதற்கிணங்க வாக்களிக்கப்படவேண்டும் உத்தேச திருத்தங்கள் பற்றி உறுப்பினர்களுக்குப் போதிய முன்னறிவித்தல் கொடுக்கப்படவேண்டும். சட்டமூலமொன்று முழுப்பாராளுமன்றக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படும் போது சபாநாயகர் அல்லது தலைமை தாங்கும் அலுவலர் அக்கிராசனத்தை விட்டகன்று சபாபீடத்திலுள்ள ஆசனத்தில் அமர்கின்றார். படைக்கலச் சேவிதர் செங்கோலைச் சபாபீடத்திலிருந்து எடுத்துக் கீழேயுள்ள ஆதாரவளைவில் வைக்கின்றார் .அதன் பின்னர் சட்டமூலம் ஒவ்வொரு வாசகமாக திருத்தங்கள் எவையேனுமிருப்பின் அத்திருத்தங்களுடன் பரிசீலனை செய்யப்படுகின்றது. நிலையியற் கட்டளைகள் 37-40 திருத்தங்களுக்கான நடைமுறையை விளக்குகின்றன. திருத்தங்கள் சில சொற்களை நீக்கி வேறு சொற்களைப் பதிலீடு செய்வதன் மூலம் அல்லது புதிய சொற்களை உட்புகுத்துவதன் மூலம் அல்லது வெறுமனே சில சொற்களை அகற்றுவதன் மூலம் செய்யப்படலாம். திருத்தங்கள் பற்றிய எழுத்திலான முன்னறிவித்தல் செயலாளர் நாயகத்துக்குக் கொடுக்கப்படவேண்டுமென்பதுடன் அவை அரசியலமைப்புக்கு இணங்கியவையாவென்று சட்டமா அதிபரால் பரிசீலிக்கப்படவும் வேண்டும். குழுவில் ஒவ்வொரு வாசகமும் தனித்தனியாக நிறைவேற்றப்படவேண்டுமென்பதுடன் ஒவ்வொரு அட்டவணையும் தனி வேறாகப் பிரேரிக்கப்படவும் வேண்டும்.

ஏலவேயுள்ள வாசகங்களைப் பரிசீலித்த பின்னர். ஆயின் அட்டவணைகளைப் பரிசீலிப்பதற்கு முன்னர் புதிய வாசகங்கள் முன்வைக்கப்படுகின்றன. அவ்வாறே ஏலவேயுள்ள அட்டவணைகளின் பரிசீலனையின் பின்னர் புதிய அட்டவணைகள் சேர்த்துக்கொள்ளப்படலாம். அட்டவணைகளைத் திருத்துவதற்கான நடைமுறை வாசகங்களைத் திருத்துவதற்கான நடைமுறையை ஒத்தது. முன்னுரை சட்டமாக்குவாசகம். சட்டப் பெயர் என்பவையும் தனித்தனியாக நிறைவேற்றப்படவேண்டும் . சட்டப் பெயர் விரிவுப் பெயரையும் சுருக்கப்பெயரையும் உள்ளடக்கும. எனினும் சட்டமூலத்தின் குறித்த சில பிரிவுகளுக்கு முன்னிடப்பட்ட தலைப்புகளும் ஓரக் குறிப்புகளும் நிறைவேற்றப்படவேண்டியதில்லை.

குழு நிலை முடிவுறுவதன் பேரில் சபாநாயகர் அல்லது தலைமை தாங்கும் அலுவலர் அக்கிராசனத்துக்குத் திரும்பி வருகின்ற அதேவேளையில் செங்கோலும் திரும்பச் சபாபீடத்தில் வைக்கப்படுகின்றது. சபாநாயகர் அல்லது தலைமை தாங்கும் அலுவலர் சபையை மீண்டும் கூட்டுகின்ற வேளையில் சட்டமூலம் குழுவில் திருத்தங்களுடனோ திருத்தங்களின்றியோ நிறைவேற்றப்பட்டதெனச் சபைக்கு அறிக்கையிடவேண்டும்.

*மூன்றாம் மதிப்பீடு*

ஒரு சட்ட மூலத்தின் மூன்றாம் மதிப்பீடானது சட்டமூலத்தின் ஒட்டுமொத்தமான உள்ளடக்கத்தைக் குழு நிலையைத் திருத்தங்களுடன் அங்கீகரிப்பதற்காகும். இக்கட்டத்தில் வார்த்தைகளில் அல்லது வாசக உருவில் திருத்தங்களையும் பிரிவுகளை இலக்கமிடுதல் ஆகியவற்றையும் மட்டும் செய்யலாம். மூன்றாம் மதிப்பீட்டின் போது அமைச்சர் இடை நேர் விளைவான திருத்தங்களைச் செய்வதற்குச் சபையின் அங்கீகாரத்தைக் கோருவது வழக்கம். மூன்றிலிரண்டு பெரும்பான்மை மூலம் நிறைவேற்றப்படவேண்டிய சட்டமூலங்கள் மூன்றாம் மதிப்பீட்டின் போதும் அவ்வாறே நிறைவேற்றப்படவேண்டும். சபாநாயகரின் சான்றுரை சட்டமூலத்தில் குறிக்கப்படுமுன் எந்நேரத்திலும் இலக்கண அல்லது தட்டெழுத்துப்பிழைகள் திருத்தப்படலாம்.

*சபாநாயகரின் சான்றுரை*

பாராளுமன்றச் சட்டமொன்று நிறைவேற்றப்படுவதன் இறுதிக் கட்டம் பின்வரும் வடிவத்தில் சபாநாயகர் புறக்குறிப்பிடுவதாகும்.

"இந்தச் சட்டமூலம் (சட்டமூலத்தின் பெயர்) பாராளுமன்றத்தினால் முறைப்படி நிறைவேற்றப்பட்டுள்ளது.

சட்டமூலம் நிறைவேற்றப்படுவதற்கு ஒரு விசேட பெரும்பான்மை அத்துடன் அல்லது மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பொன்றில் மக்களின் அங்கீகாரம் தேவைப்படின் அத்தகைய நிபந்தனைகள் இணங்கப்பட்டனவென்றும் சான்றுரை தெரிவிக்கவேண்டும். சபாநாயகரின் சான்றுரை அரசகரும மொழிகளில் இருக்கவேண்டும் . சட்டத்தின் பொருத்தமான தொடரிலக்கம் சுருக்கப்பெயர்கள் (எண்வரிசைக்) கட்டளைச் சட்டத்துக்கிணங்க" உட்புகுத்தப்படுகின்றது.

பாராளுமன்றத்தின் குறித்த சில சட்டங்கள் எந்த நாளில் அச்சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட வேண்டுமென அவ்விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் வர்த்தமானி மூலம் குறித்துரைக்கலாமென்று விதித்துக் கூறுகின்ற வாசகத்தைக் கொண்டுள்ளன. சட்டமூலமொன்று மக்கள் தீர்ப்பொன்றில் மக்களால் அங்கீகரிக்கப்படவேண்டியுள்ள போது அது சபாநாயகரின் சான்றுரைக்கு மேலதிகமாக அத்தகைய மக்கள் தீர்ப்பொன்றில் மக்கள் முன்வைக்கப்படும் நோக்கத்துக்காக ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும்.

அத்தகைய மக்கள் தீர்ப்பின் செல்லுபடியாகும் நிலை ஆட்சேபிக்கப்படுமாயின் உயர்நீதிமன்றம் அதன் தீர்மானத்தை வழங்கும்வரை சட்டமூலத்தில் சான்றுரை எழுதப்படலாகாது. மக்கள் தீர்ப்பொன்றை ஆட்சேபிப்பதற்கான ஏற்பாடு 1988இன் 17ஆம் இலக்க மக்கள் தீர்ப்பு (திருத்தச்)சட்டத்தில் காணப்படுகின்றது. மக்கள் தீர்ப்பொன்றை ஆட்சேபிக்கின்ற ஒரு மனு வர்த்தமானியில் முடிவு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து இருபத்தொரு நாட்களுக்குள் தாக்கல் செய்யப்படவேண்டும். அத்தகைய மனு இயன்றவரை மனு சமர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாத காலத்தினுள் விளங்கப்பட்டு முடிவு செய்யப்படவேண்டும். அரசியலமைப்பின் கீழ் சட்டங்களைச் சட்டமாக்கியதன் பின் மீளாய்வு செய்யமுடியாது. சட்டமூலமொன்று ஜனாதிபதியின் அல்லது சபாநாயகரின் சான்றுரை எழுதப்பட்டதன் மேல் சட்டமாக வருகின்றவிடத்து எவ்வித ஏதுவின் மீதும் நீதிமன்றம் அல்லது நியாயசபை எதுவும் அதன் செல்லுபடி பற்றி விசாரிக்கவோ. தீர்ப்பளிக்கவோ அல்லது எவ்வகையிலும் கேள்விக்குட்படுத்தவோ கூடாது.

*அரசியலமைப்புத் திருத்தங்கள்*

அரசியலமைப்புத் திருத்தங்களைச் சட்டமாக்குதல் ஏனைய சட்டங்களை ஆக்குதலை விடக் கூடிய சிக்கலானது. அரசியலமைப்பின் அத்தியாயம் Xii இவ்விடயத்தை விளக்குகின்றது. அரசியலமைப்பை நீக்குகின்றனவும் திருத்துகின்றனவுமான சட்டமூலங்களுக்கும் அரசியமைப்புக்கு ஒவ்வாத ஏற்பாடுகளைக் கொண்டுள்ள வேறு சட்டமூலங்களுக்கும் அது விசேட ஏற்பாடு செய்கின்றது.

அரசியலமைபைத் திருத்துவதற்கான ஒரு சட்டமூலம் அவ்வாறு அதன் விரிவுப் பெயரில் திட்ட வட்டமாகக் குறித்துரைக்கப்பட்டிருந்தாலன்றி அது பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரத்தில் சேர்துக் கொள்ளப்படுதலாகாது. அரசியலமைப்பை நீக்குகின்ற ஒரு சட்டமூலத்துக்கும் ஒத்த ஏற்பாடு குறித்துரைக்கப்பட்டுள்ளது. இந் நிபந்தனைக்கு இணங்கக்கூடியதாகச் சட்டமூலம் பொருத்தமான முறையில் திருத்தப்பட்டால் அது ஒழுங்குப்பத்திரததில இடம்பெறலாம்.

(தொடரும்)

# துப்பாக்கிச் சூட்டில் இளைஞன் படுகாயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் ஐய்யன் கேணியில் கடந்த சனிக்கிழமை இரவு இளைஞர் ஒருவர் இனந் தெரியாத நபர்களினால் சுடப்பட்டு காயங்களுடன் ஏறாவூர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிற்குட்பட்ட கரடியனாற்றைச் சேர்ந்த சரவணமுத்து சிவராசா (வயது 23) என்ற இளைஞனே படுகாயமடைந்தவராவார்.

ரமேஸ்புரத்திலுள்ள உறவினரின் வீட்டிற்குச் சென்று சைக்கிளில் திரும்பிக் கொண்டிருக்கையில் வழிமறித்த நபர்கள் துப்பாக்கிப் பிரயோகத்தை செய்துவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக அவ்விளைஞன் தெரிவித்ததாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர் (ச)

# குடும்பஸ்தர் வெட்டிக்கொலை

(வவுனியா)

வவுனியா-செட்டிகுளம் பொலிஸ் நிலையப் பிரிவுக்குட்பட்ட மணிக் பண்ணையில் கடந்த சனிக்கிழமை இரவு ஒருவர் வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

செட்டிகுளம் மணிக்பண்ணைப் பகுதியில் கடந்த சனிக்கிழமை 9.45 மணியளவில்கே.சாமிக்கண்ணா (வயது 53) என்பவர் அவருடைய மருமகன் முறையான முத்து விஜயகுமார் என்பவரால் கோடரியால் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொலைச் சந்தேக நபர் தலைமறைவாகியுள்ளதையடுத்து அவரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

இச்சந்தேக நபர் மதவாச்சி மற்றும் ஓமந்தைக்கு அப்பால் தப்பியோடி விடாமல் தடுப்பதற்காக உறுதியான நடவடிக்கை எடுக்குமாறு சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை மேற்கொண்ட வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (ச)

# மலையக மக்களுக்கு தரமற்ற மா விநியோகம்

## ஐ.தே.க. அதிருப்தி

(கொழும்பு)

மலையக மக்கள் மத்தியில் விநியோகிக்கப்பட்டு இறக்குமதி செய்யப்பட்ட கோதுமை மா தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி அதிருப்தி வெளியிட்டுள்ளது.

பிறிமா மாவிற்குப் பதிலாக கொரியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கோதுமை மா தற்சமயம் மலையகப் பகுதிகளில் கூட்டுறவு சங்கங்களினால் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

எனினும் இந்த கோதுமை மாவினைக் கொண்டு எந்தவித உணவுப் பொருட்களையும் தயாரிக்க முடியவில்லை என்று மலையக மக்கள் முன்னணி குற்றம் சுமத்தியுள்ளது.

வெதுப்பக உரிமையாளர்களும் இதே கருத்தையே வெளியிட்டுள்ளனர். இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹெகலிய றம்புக்வெல, கோதுமை மா மற்றும் தேங்காயின் விலை அதிகரிப்பானது தோட்டத் தொழிலாளர்களைப் பாதிக்கின்ற விடயமாகும்.

இவ்வாறான சுமைகளை தோட்டத் தொழிலாளர்கள் மீது சுமத்துவதன் மூலம் அரசாங்கம் அவர்களுக்கு தீங்கு விளைவிக்கின்றது.

இந்நிலையில் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள நிலைமையை மலையக தலைமைகள் புரிந்து கொள்வது அவசியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நுகர்வோர் விவகார அமைச்சின் கூற்றுப்படி கோதுமை மாவில் விலை ஏற்றம் ஏற்படின் மக்கள் நேரடியாக நீதிமன்றத்திற்கு செல்ல முடியும்.

இந்நிலையில் தரமற்ற கோதுமை மா விநியோகம் செய்வதாயின் நுகர்வோர் விவகார அமைச்சு என்ற ஒரு அமைச்சு அவசியம் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, இது தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாட்டை அறிந்து கொள்வதற்காக வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே கருத்து எதையும் தெரிவிக்க மறுத்து விட்டமை குறிப்பிடத்தக்கது. (க-7,9)

# கலந்துரையாடல்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு பிரதேசத்திலுள்ள அனைத்து பொது அமைப்புகளுக்குமான விஷேட கலந்துரையாடல் ஒன்று இன்று மாலை 3 மணிக்கு யா/புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (7-121)


# 5 ஆம் தர மாணவர்களே!

நீங்கள் ஆவலோடு எதிர்பார்த்திருக்கும் 5ஆம் தர புலமைப்பரீட்சை மாதிரி வினாத்தாள் உங்கள் வலம்புரியில் ஒவ்வொரு புதன்கிழமை தோறும் வாங்கத் தவறாதீர்கள்.

கல்விப்பிரிவு,வலம்புரி.

# O/L மாணவர்களே!

உங்கள் வலம்புரியில் மிகவிரைவில் பிரபல ஆசிரியர்கள் தயாரித்த மாதிரி வினாத்தாள்களின் பிரதிகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்.

கல்விப்பிரிவு, வலம்புரி.

# ஐயங்கள் ஆயிரம்

## முயல் காது

முயலின் காது பெரிதாக இருப்பது ஏன்?

முயலுக்குக் காது பெரியதாக இல்லாமல் இருந்தால் அதனால் வாழ முடியாது. தனக்கு ஆபத்து ஏற்பட இருக்கிறதென முயலுக்குத் தெரிந்தால் அது உடனே புதருக்குள் ஓடிப் பதுங்கிவிடும். அப்போது அதன் நீண்ட காதுகள் சுற்றுப் புறச் சூழ்நிலையை, ஒலியைக் கொண்டு துல்லியமாக அறிகின்றன. இதோடு, சுற்றுப் புறத்தில் வெப்பம் அதிகமாகும்போது முயலின் உடலுக்குத் தேவையானளவு வெப்பத்தைச் சீராக வைத்துக்கொள்ளவும் அதன் காதுகள் பயன்படுகின்றன.

## இரத்தமும் பாலும்

தாவரங்களில் சில செடிகளும் பால் சுரக்கின்றன. செடிகளில் வடியும் பால், மிருகங்களின் பாலுக்குச் சமமானதல்ல. செடியில் வடியும் பால் பாதுகாப்புக்காக உற்பத்தியாவது. ஆடு, மாடுகள் மேய்ந்துவிடாமல் தடுப்பதற்காக அப்படி ஓர் உபாயம்.

மிருகங்களின் பால், இரத்தத்திலிருந்து உருவாவதல்ல, மார்புகளில் பால் சுரப்புகளிலிருந்து உருவாக்கப்படுவது. எனவே இரத்தம் பாலாக மாறுவதாகக் கருதக்கூடாது. தேவையான ஒக்சிஜன், சக்தி ஆகியவற்றை இரத்தம் வழங்குவது உண்மைதான். ஆனால் இரத்தம் பாலாக நிறம் மாறுவதில்லை. கரப்பான் பூச்சி, சிலந்தி ஆகிய பூச்சிகளுக்கும் இரத்தம் உண்டு. அவை செந்நிறமாக இருக்காததற்குக் காரணம் அவற்றின் இரத்தத்தில் இரும்புச் சத்துக்குப் பதிலாக செம்புதான் உள்ளது. அதனால் செந்நிறம் இல்லை!

## ஒரு வயதுக்கு முன்பே



ஒரு வயதுக்கு முன்பே குழந்தைகளுக்குத் தரப்படும் உணவையே அவர்கள் பெரியவர்களானதும் விரும்பிச் சாப்பிடுகிறார்கள்.

சின்னஞ்சிறு குழந்தைகளுக்கு ஒரு வயது ஆகும் முன்பே பெற்றோர் எந்தரக உணவை ருசிக்க கொடுத்துப் பழக்கப்படுத்துகிறார்களோ அந்தக் குழந்தைகள் வளர்ந்து பெரியவர்கள ஆனதும் அதே உணவு வகைகளையே விரும்பிச் சாப்பிடும் என்ற உண்மை ஆய்வில் தெரியவந்துள்ளது. பிரிமிங்காம் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் குழு இதை அறிவித்துள்ளது. உதாரணமாக ஒரு வயதுக்கு முன்பு ரஸ்க், பிஸ்கட் ஊட்டப்படும் குழந்தைகள் பிற்காலத்திலும் அநதவகை உணவை விரும்புகின்றன. பழங்கள், காய்கறிகள் போன்ற உணவு வகைகளை ருசி பார்க்காமலேயே பிற்காலத்தில் தவிர்த்து வருகின்றன.

## குழந்தைகளைப் பற்றும் ருசி

எனவே சின்னஞ்சிறு குழந்தைகளுக்கு ஒரு வயதுக்கு முன்பே பழங்கள், காய்கறி உணவு வகைகளை ருசி பார்த்துச் சாப்பிட பழக்கப்படுத்துவது மிகவும் அவசியம் என்கிறார்கள் இந்தக் குழுவினர்.

## பெண்களின் அஸ்துமா ஆபத்தை அதிகரிக்கும் உடல் பருமன்



உடல்நலக் கோளாறுகளில் குறிப்பிடத்தக்க இடம்வகிக்கும் அஸ்துமாவுக்கும், உடல் பருமனுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்கிறார்கள மருத்துவ வல்லுநர்கள்.


உலகம் முழுவதும் உடல்பருமன் தொற்று வியாதி போல பெருகிக்கொண்டே வருகிறது. அதற்கேற்றாற் போல அஸ்துமாவும் அதிகரித்து வருவதை அவர்கள் தங்கள் வாதத்துக்குச் சுட்டிக்காட்டுகிறார்கள. 9 முதல் 26 வயது வரையிலான பெண்களில் 4இல் ஒருவருக்கு அஸ்துமா பாதிப்புக் காணப்படுவதற்கு உடல் பருமன்தான் காரணமாக உள்ளது.

அதேசமயம் ஆண்களின் உடல் பருமனுக்கும், அஸ்துமாவுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இருப்பதாகத் தெரியவில்லை. அஸ்துமாவைப் பொறுத்தவரை ஆண்கள் மற்றும் பெண்களை வெவ்வேறு விதமாகப் பாதிக்கிறது. அதாவது ஆண்கள் பருவம் எய்துவதற்கு முன்பாக அஸ்துமா நோயினால் பாதிக்கப்படுகிறார்கள் என்றால், பெண்களைப் பொறுத்தவரை பருவமடைந்த பிறகுதான் அஸ்துமா பாதிப்புக்குள்ளாகிறாகள. பருவம் அடைந்த பெண்களின் உடலில் அதிகப்படியான கொழுப்புச்சத்து சேர ஆரம்பிப்பது அல்லது ஹார்மோன்களின் தீவிர இயக்கம் இதற்குக் காரணமாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

அஸ்துமா நோயின் முக்கிய காரணிகளாகக் கருதப்படும குடும்பப் பாரம்பரியம், புகைப்பிடிக்கும் பழக்கம், தாய்ப்பால், பிறந்த எடை ஆகியவற்றை எல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டு பார்த்தாலும், உடல் எடை அளவுக்கு அவைகள் முக்கிய பங்கு வகிப்பது இல்லை என்று மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

## கடிகார முட்கள் வலஞ்சுழியாக நகர்வது ஏன்?

முள் சுற்றும் கடிகாரத்தைக் கண்டுபிடித்தவர்கள ஐரோப்பாவில் இருந்ததினால இப்படி ஏற்பட்டுவிட்டது. பூமியின் வடகோளத்தில் இருப்பவர்களுக்கும், நமக்கும் கூட சூரியன் எப்போதும் தென்புற வானில் தான் நகர்வதாகத் தெரியும்.




வடக்கு நகர்வு இவர்களுக்கு இடப்பக்கத்திலிருந்து வலப்பக்கம் போவதாகவே இருக்கும்.


ஆதலால் கடிகாரத்தின் மணி முளளை வலஞ்சுழியாக செய்துவிட்டனர்.

16ஆம் நூற்றாண்டில் நிமிடமுள சேர்த்தபோது அதையும் அதே திசையில் செல்வதாகச் செய்துவிட்டனா்.

நம்பிக்கை எதையும் துணிந்து செய்கிறது.
அன்பு எதையும் பொறுத்துக் கொள்கிறது.
-ஓர் அறிஞர்

## இவரைத் தெரியுமா? பரிசுப்போட்டி இல. 54

### படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?



மறைந்த பழம் பெரும் நடிகர்களுள் ஒருவரான இவர், 'காதல் மன்னன்' என்ற பட்டத்தைத் தனதாகக் கொண்டவர். இவரை உங்களுக்குத் தெரிந்தால் உங்கள் விடைகளை எழுதி எதிர் வரும் 04ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும். நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-

**இவரைத் தெரியுமா?**
**போட்டி இல:- 54**
**வலம்புரி ~ சங்குநாதம்**
**இல:- 15, வெள்ளாந்தெரு,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

குறிப்பு:-
சரியான விடை எழுதுபவர்களில் மூன்று போட்டியாளர்களுக்கு குலுக்கல் முறைமூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசு வழங்கப்படும் பரிசுபெறும் அதிஷ்டசாலிகள் தமக்கான பரிசுப்பணத்தினை 'வலம்புரி' காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.

### இவரைத் தெரியுமா? பரிசுப் போட்டி இல:-54

படத்தில் உள்ளவரின் பெயர் :-..........................
அனுப்புபவரின் முழுப்பெயர் :-..........................
அனுப்புபவரின் முகவரி :-..........................
..........................
..........................

### இவரைத்தெரியுமா? பரிசுப்போட்டி இல - 52 சரியான விடை





நடிகை ஐஸ்வர்யா ராய்

### இவரைத் தெரியுமா பரிசுப்போட்டி இல. 52இல் பங்குபற்றிப் பரிசுபெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம்


| | | |
|---|---|---|
| முதற் பரிசு | :~ | செ.செல்வராகவன் மானிப்பாய் வீதி, மானிப்பாய். |
| இரண்டாம் பரிசு | :~ | தா.கார்த்திகா கரவெட்டி கிழக்கு, கரவெட்டி. |
| மூன்றாம் பரிசு | :~ | சி.ஜெயகுக்ஷன் இலங்கை வங்கி ஒழுங்கை, சுன்னாகம் தெற்கு, சுன்னாகம். |

### சரியான விடை எழுதிப் பாராட்டுப் பெறுவோர் பெயர் விபரம்

கே.இராஜகோபால், வட்டுக்கோட்டை. வி.இளங்கோ, கோப்பாய். T.S.சயந்தன், வட்டுக்கோட்டை. ம.சர்மினி, கோண்டாவில். வே.சுபாஷினி, மானிப்பாய். பா.தவமணி, பருத்தித்துறை. ச.அனிஸ்ரன், ஊர்காவற்றுறை. க.கபிலன், நீர்வேலி. அ.சதுர்சன், கொக்குவில். ந.லோஜிதன், உரும பிராய் கிழக்கு. P.செல்வராணி, வட்டுக்கோட்டை. பா.உதயறஞ்சன், வட்டுக்கோட்டை. K.புஸ்பராணி, தம்பசிட்டி. பி.ஜெயா, கந்தர்மடம். சி.விவேக், வியாபாரிமூலை. இமோகனரூபன், கொய்யாத்தோட்டம். வே.குமாரசுவாமி, கரவெட்டி. லோ.அபிராமி, வலவெட்டி. சு.விதுஷன், கொக்குவில். து.நக்கீரன். மல்லாகம். வ.நிசாந்தன, நாவாந்துறை. L.சுவஸ்திகா, உடுப்பிட்டி. S.நிகேதினி, வண்ணார்பண்ணை. கை.அனுஷன். யாழ்ப்பாணம். N.சங்கவி, கைதடி. அ.அனித்தா, சித்தன்கேணி. க.தவசீலன், நாவலர் வீதி. பி.திவ்வியா, நல்லூர். R.லோகன, வடமராட்சி.

# சிறுநீரக செயலிழப்பை தடுத்து நிறுத்தும் தேநீர்!

இன்று நாட்டில் சிறுநீரக நோய் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே போகிறது. அதனால்



சிறிநீரக செயலிழப்பால் பலர் இறக்க நேரிடுகிறது. இந்த நோய் வந்து விட்டாலே இது தீர்க்க முடியாத நோய்போல் மக்கள் மிகவும் பயந்து விடுகிறார்கள். சிறுநீரகம் நல்ல முறையில் செயல்படுகிறதா இல்லையா என்பதை கண்டறிய பல நவீன பரிசோதனைகள் உள்ளன. அவற்றில் பரிசோதனை செய்து கொள்ள செலவு அதிகமாகும். சிறுநீரகங்களின் செயல்பாட்டை கண்டறிய செலவில்லாத மிக எளிமையான பரிசோதனை முறையை டாக்டர் தேவேந்திர வோரா "ஹெல்த் இன் யுவர் ஹேண்ட்' என்ற புத்தகத்தில் தெளிவுபட கூறியுள்ளார்.

அதாவது சிறுநீரக சிகிச்சையை ஆரம்பிக்கும் முன் காலையில் படுக்கையிலிருந்து எழுந்தவுடன் கழிக்கும் முதல் ஏதாவது நிற மாற்றமோ அல்லது கலங்கலாகவோ அல்லது துர்வாடை உள்ளதாகவோ இருக்கிறதா என்று கவனிக்க வேண்டும். அப்படி ஏதாவது மாற்றமிருந்தால் சிறுநீரகம் சரியாக செயல்படவில்லை என அறிந்து கொள்ளலாம். அதற்காக அச்சப்படத்

## மருத்துவ விளக்கம்

தேவையில்லை. ஒரு டம்ளர் (225 மி.லி) தண்ணீரில் ஒரு தேக்கரண்டி தேயிலையைப் போட்டு அரை டம்ளராக ஆகும் வரை கொதிக்க வைத்து வடிகட்டி அத்துடன் அரை டம்ளர் சாதாரண தண்ணீரைக் கலந்து இளஞ்சூட்டுடன் பால், சர்க்கரை கலக்காமல் காலையில் வெறும் வயிற்றில் குடித்து வர வேண்டும்.

சிலருக்கு குமட்டல், வாந்தி ஏற்படலாம். அப்பொழுது ஒரு துண்டு கற்கண்டை வாயில் போட்டுக் கொண்டு குடிக்கலாம். பதினைந்து நாட்களுக்குப் பிறகு மறுபடியும் முன்பு செய்தது போல் காலையில் முதல் சிறுநீரைச் சோதனை செய்து பார்த்தால் துர்வாடையோ, நிறமோ இல்லாமலிருந்தால் சிறு நீரகம் நல்ல முறையில் செயல்பட ஆரம்பித்துவிட்டது என்று பொருள் கொள்ளலாம். மேலும் 15 நாட்களுக்கு இதையே தொடர்ந்து குடித்து வரலாம்.

மேற்கண்ட சிகிச்சை முறைகளை மேற்கொண்டுள்ள நாட்களில் 40 கிராம் சுத்தமான வெள்ளிக்கட்டிகளை அல்லது வெள்ளிக்காசுகளை (செம்பு அல்லது ஸ்டீல் பாத்திரத்தில் போட்டு) எட்டு டம்ளர் தண்ணீர் ஊற்றி வைத்துக்கொண்டு தினசரி 3 அல்லது 4 தடவை குடித்துவரலாம். (இதற்கு வெள்ளி நகைகளை உபயோகிக்கக் கூடாது) இந்த தண்ணீர் சிறுநீரகம், சிறுநீர்ப்பை ஆகியவற்றின் செயல்பாட்டை வீரியப் படுத்துவதுடன் உடலில் உள்ள அதிகப்படியான சூட்டையும் குறைக்கிறது.

தினமும் இரண்டு அல்லது மூன்று கப் கொத்து மல்லி, கறிவேப்பிலை இலைச்சாறும் குடித்து வரலாம். தேன் கலந்து

**டாக்டர் ஆறுமுகம்**

குடிக்கலாம். அக்குபஞ்சர் சிகிச்சையும் மேற்கொள்ள வேண்டும். மேற்கண்ட சிகிச்சை செய்து கொண்ட 15 நாட்களுக்குப் பின் ஆச்சரியப்படத்தக்க செயல்பாடு இருக்கும். சிறுநீர் தங்கு தடையின்றி தாராளமாக வெளியேறும். சிறுநீரக நோயின் மூலகாரணத்தைக் கண்டு பிடித்து சிகிச்சை அளித்து வந்தால் 50-75 நாட்களில் நோய் முற்றிலும் நீங்கி ஆரோக்கியம் கிட்டும். சிறுநீரகப் பிரச்சினையை முழுமையாகக் களைந்து நலமோடு வாழலாம். □

# இராணுவ கட்டுப்பாட்டு பகுதியில் கருணா குழு!

## க.கா. குழு தீவிர விசாரணை

(கொழும்பு)

தமிழீழத் தாயகத்தில் இலங்கை இராணுவம் ஆக்கிரமித்துள்ள பகுதிகளில் கருணா குழுவினர் முகாம்கள் அமைத்து இயங்குவது குறித்து இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறது.

இது குறித்து கருத்துத் தெரிவித்துள்ள கண்காணிப்புக் குழுவினர் இராணுவத்தின் இத்தகைய நடவடிக்கைகள் வன்மையான யுத்த நிறுத்த மறலே என்றும் சாடியுள்ளனர்.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஒலட்ஸ்டோபிர் இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில், சண்டே லீடர் பத்திரிகை இந்த குழுக்களின் முகாம்கள் பற்றி அம்பலப் படுத்திய தகவல்கள் குறித்து உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

இது போன்ற முகாம்கள் குறித்து தமிழீழ விடுதலைப் புலிகள் முன் வைத்த முறைப்பாடுகள் குறித்து போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் இரண்டு குழுக்கள் விசாரணை நடத்தி வருகின்றன என்றும அவர் தெரிவிததார். (க)

# சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் இருவிடயங்களுக்கு மக்கள் ஆணை

(கொழும்பு)

அரசாங்கம நடத்த உத்தேசித்திருக்கும் சர்வஜன வாக்கெடுப்பானது இரண்டு முக்கிய விடயங்களை முன்வைத்து நடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு விடயங்களுக்கும் ஒரே தடவையில் மக்களின் ஆணையைப பெற்றுக்கொள்ளும் வகையில் ஜனாதிபதிக்கு மிகவும் நெருங்கிய சட்ட ஆலோசகர்களும் அரசியல் ஆலோசகர்களும் இதற்கான திட்டங்களை வடிவமைத்து வருவதாக தெரியவந்துள்ளது.

அரசியலமைப்பு திருத்தத்திற்காகவும அதன்படி வடக்கு -கிழக்கு மக்களுக்கு சமஷ்டி நிர்வாக முறையொன்றை வழங்கவும் தற்போது இருக்கும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைக்கு திருத்தம் கொண்டு வரவும் ஒரே தடவையில் மக்களின் ஆணையைப் பெறுவதே ஜனாதிபதியின் திட்டம எனத் தெரிவிக்கப்படுகின்றது. (க)

# இரகசியமான முறையில் கதிர்காமரும் சோமவன்சவும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கும் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஷ அமரசிங்கவுக்கும் இடையில் இரகசிய ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுளளது.

இது தொடர்பில் அரசு தரப்பிலிருந்து செய்திகள் வெளியாகியிருப்பதாக சிங்கள வார இதழான 'இருதின' செய்தி வெளியிட்டுள்ளது.

அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் பி.பி.சி. நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில்,

யார் எது கூறினாலும், ஜே.வி.பி எனனிடம் உறுதிமொழி கொடுத்துள்ளது. அதனை நான் எவருக்கும் குறிப்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் தெரியப்படுத்த மாட்டேன்.

ஆகவே மற்றவர்களுடைய பேசசுக்களை பொருட்படுத்தத் தேவையிலலை என அவர் அந் நிகழ்வில தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (க-4)

# போலித் தகவல்களால் அரசுக்கு பாதக நிலை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் விமான ஓடுதளம் தொடர்பாக போலித் தகவல்களை வெளியிட்டதன் காரணமாக சர்வதேச ரீதியில் அரசாங்கத்துக்கு பாதக நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

புலிகளின் இரணைமடு விமான ஓடுதளம் தொடர்பாக 1995 ஆம் ஆண்டே தகவல்கள் வெளியிடப்பட்டிருபபதாகவும் ஆனால் தற்போது போர் நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னரே இது அமைக்கப்பட்டதாக அரசாங்கம் வெளியிட்ட தகவல்கள் போலியானவை என்றும் சில சர்வதேச நிறுவனங்கள் தகவல்களை வெளியிட்டுள்ளன.

அததுடன், வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரிடம் இலண்டனில் இது தொடர்பாக பிரித்தானிய அரசியல் பிரமுகர்கள் வினா எழுப்பிய தாகவும், ஆனால் அதற்கு அவர் பதிலளிக்கத் தடுமாறிய போதும் பினபு அதனைச் சமாளித்து விட்டார் எனவும் தெரியவந்துள்ளது. (7-4)

# மின் கட்டணங்கள் விரைவில் 20 சத வீதத்தால் உயரும்!

(கொழும்பு)

மின் கட்டணத்தை 20 சதவீதத்தால் அதிகரிப்பதற்கு இலங்கை மின்சார சபை தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான பிரேரணை ஒன்று அமைச்சரவை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படவுள்ளது என இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் ரஞ்சித் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும கூறுகையில்,

மின் கட்டணம் மறுசீரமைப்பு தொடர்பாக பல்வேறு மாற்றங்களை இலங்கை மின்சார சபை மேற்கொண்டு வருகின்றது.

இதன் முதற்கட்டமாக மின்கட்டணங்களுக்காக வழங்கப்பட்டுள்ள மானியங்களை நீக்குவது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

மிகுந்த பொருளாதார நெருக்கடியில் உள்ள இலங்கை மின்சார சபைக்கு திறைசேரி 5 பில்லியன் ரூபாவினை முற்பணமாக வழங்கியுள்ளது.

இலங்கை மின்சார சபை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கும் சிறு மின்னுற்பத்தி நிலையங்களுககும் பெருமளவு பணத்தினை செலுத்த வேண்டிய நிலையில் இருந்தது.

திறைசேரி பணத்தை வழங்கியதன் மூலமே இக் கடன்கள் தீர்க்கப்பட்டுள்ளன. இல்லையெனில் தொடர்ச்சியான மின்வெட்டு மேற்கொள்ள வேண்டிய நிலைக்கு இலங்கை மின்சார சபை தள்ளப்பட்டிருக்கும்.

இதேவேளை, மின் சக்தி, எரிபொருள் வலு அமைச்சு திறைசேரியிடம் 80 பில்லியன் ரூபாவினை கடனாக பெற உத்தேசித்துள்ளது.

இது தவணை முறையில் மீண்டும செலுத்தப்படக் கூடியதாக அமையும்.

மானிய அடிப்படையில் குறைந்த கட்டணத்தில் மின்சாரத்தை பாவனைக்கு வழங்குவதனால் இலங்கை மின்சார சபை நாளாந்தம் 35 தொடக்கம் 40 மில்லியன் ரூபா நட்டத்தை எதிர்கொள்கின்றது.

இம் மின்கட்டண உயர்வுக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்குமிடத்து அடுத்த ஓரிரு வாரங்களுககுள மின் கடடண உயர்வு நடைமுறைக்கு வரும்.

இப் புதிய மின் கட்டணத்தின் படி 1,000 ரூபாவை மின் கட்டணமாக செலுத்தி வந்த ஒருவர் 1,200 ரூபாவை செலுத்த வேண்டியிருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (க)

# புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளில் வீடு அமைக்கும் பணிகள் ஆரம்பம்!

(கொழும்பு)

சுனாமியால் வீடுகளை இழந்த யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த மக்களுக்கு புதிய வீடுகளை அமைத்துக் கொடுக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக மேற்படி மாவட்டங்களில் தலா 100 வீடுகள் அமைக்கப்படும் என்றும் இப்பணிகளுக்கு அரசாங்க அதிபர் பொறுப்பாக இருப்பார் என்றும் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் செயலாளர் எம்.எஸ். ஜயசிங்க தெரிவித்தார்.

இவ்வீடுகள் ஒவ்வொன்றுக்கும் 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவாகும் என்றும் இரண்டு அறைகள், வரவேற்பறை, சமையலறை, மலசல கூடம் ஆகியவற்றை உள்ளடக்கி இவ் வீடுகள் அமைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேற்படி வீடமைப்பு திட்டம் பூர்த்தி செய்யப்பட்டதும் அடுத்த வீடமைப்பு திட்டம் ஆரம்பிக்கப்படும்.

ஜனாதிபதி அறிவுறுத்தலின் பேரில் இந்த வீடமைப்பு திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. படையினரின் கட்டுபபாட்டில் இல்லாத முல்லைத் தீவிலும் இத்திட்டத்தை ஆரம்பிப்பார்கள் என்றும் செயலாளர் எம்.எஸ். ஜயசிங்க தெரிவித்தார்.

யாழ. வீடமைப்பு திட்டம் குறித்து யாழ். அரசாங்க அதிபர் கே.கணேஷ், டன முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர்கள், அப் பகுதியில் உள்ள சகல தரப்பினரையும் அழைத்து பேச்சுவார்த்தை நடத்திய பின தொடர்பு கொண்டு கேடட போது யாழ். மாவட்டத்திற்கான வீடமைப்பு திட்டம் வடமராட்சி கிழக்கு மணற்காடு என்ற இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது என்றார். (க)

# அமைச்சரவையில் பாரிய மாற்றம்?

(கொழும்பு)

எதிர்வரும் மே மாதத்தில் அமைச்சரவையில் பாரிய மாற்றங்கள் ஏற்படலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் முதலாவது அமைச்சரவை மாற்றம் இதுவாக அமையலாம்.

இம்மாற்றத்தின் போது ஜே.வி.பி.யின் நான்கு அமைச்சர்களைத் தவிர, ஏனைய அமைச்சர்களின் அனைத்து அமைச்சுக்களிலும் மாற்றங்கள் வரலாம் என்றும்,

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு மேலும் ஒரு அமைச்சுப் பொறுப்பு வழங்கப்படலாம் என்றும் எதிர்வு கூறப்படுகின்றது.(7-4)

# ஐ.ம.சு.கூட்டமைப்பு அரசினால் விவசாயிகள் தற்கொலை முயற்சி!

## ரவி கருணாநாயக்க எம்.பி.

ஆட்சிக்குவரும்போது உள்நாட்டு பொருளாதாரத்தை பலப்படுத்தப்போவதாக வாக்குறுதியளித்த கூட்டமைப்பு அரசாங்கம், விவசாயிகளை நெருக்கடியான சூழ்நிலைக்கு தள்ளிவிட்டுள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கா தெரிவித்திருக்கிறார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

அரசாங்கம் நெல்லுக்கு நிலையான விலையொன்றை அறிவித்துள்ளபோதிலும் விவசாயிகளினால் அந்த விலைக்கு நெல்லை விற்பனை செய்யமுடியவில்லை. விவசாயிகளினால் ஒரு கிலோ நெல்லை 9 தொடக்கம் 10 ரூபா வரைகூட விற்பனை செய்யமுடியாத நிலையே காணப்படுகிறது.

இதனால் பல விவசாயிகள் தற்கொலை முயற்சிகளில்கூட ஈடுபட்டுள்ளார்கள்.

விவசாயிகளைப்போல் நுகர்வோரும் பாதிக்கப்பட்டுள்ளனர் அரிசியை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து 40 ரூபா தொடக்கம் 50 ரூபாவரை விற்பனை செய்கின்றார்கள். விலையில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை.

இதேவேளை, மக்கள் சிவனொளிபாதமலைக்கு செல்லும்போது 100 ரூபா அறிவிடப்படுகின்றது. இவ்வாறு அறவிடும் அரசாங்கம் தான் இன்று தேசிய உற்பத்திகளைப் பாதுகாக்க முன்வந்துள்ளது.

இன்று மின்சாரசபையையும், துறைமுகத்தையும்கூட விற்பனை செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். (க-7,8)

# ஐ.ம.சு.மு. அரசின் ஆட்சியிலேயே மக்கள் பாதிப்புக்குள்ளார்கள்; ராஜித

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தின் ஒரு வருட ஆட்சிக் காலத்தில் நாட்டு மக்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ன தெரிவித்திருக்கிறார்.

இந்த நிலைமையை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்திடம் எதிர்பார்க்காத காரணத்தால் மக்கள் அரசாங்கம் மீது பெரிதும் நம்பிக்கையிழந்துள்ளார்கள் எனவும் அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

அவ்வறிக்கையில் இந்த அரசு ஆட்சிக்குவந்து ஓராண்டு காலத்தில் சகல பொருட்களும் 18 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளன.

தேர்தலுக்கு முன்னர் கூட்டமைப்பினர் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை மறந்துவிட்டதாகவும் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (7-8)

# வேலைத் திட்டத்தை நிறைவேற்ற கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை கலைக்கப்படுவதற்குமுன் கற்குளம்வடிகால் அணைக்கட்டுப் புனரமைத்தல், கண்ணபுரம் 1ஆம், 2ஆம், 3ஆம் ஒழுங்கைகளை நிர்மாணித்தல், திருநகர் மலசல கூடக்குழிகள் அமைத்தல், பிரப்பங்குளம் வெள்ள வாய்க்கால் வீதி நிர்மாணித்தல் முதலிய வேலைத்திட்டங்களுக்காக உறுப்பினர் நிதி ஒதுக்கப்பட்டிருந்ததும், ஆண்டுகள் பல கழிந்த பின்னரும்கூட எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை எனவும், இது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கவேண்டும் எனவும்கோரி யாழ். மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் செ. விஜயரத்தினம் மாநகர ஆணையாளருக்கு கடிதம் எழுதியுள்ளார். (து)

# ஜனாதிபதிமுறை, சமஷ்டிமுறை: கருத்துக்கணிப்புக்கு கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கும் அரசாங்கத்தின் சமஷ்டி முறைக்குமாக கருத்துக்கணிப்பொன்றை நடாத்த விருப்பதாக ஜனாதிபதி தெரிவித்த கருத்திற்கு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களும் முஸ்லிம் காங்கிரஸும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

இந்நேரத்தில் கருத்துகணிப்பை மேற்கொள்ள எடுக்கும் எந்தவொரு முயற்சியையும் தாம் எதிர்ப்பதாக முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

அரசாங்கம் புலிகளுடன் பேச்சுக்களை நடாத்தும்போது இது குறித்துப் பேசமுடியும். ஆனால் இந்நேரத்தில் கருத்துக்கணிப்பை நடாத்துவது பிரயோசனமற்றது. தற்போது வடகிழக்கிற்கான பொதுக் கட்டமைப்பே அவசியமானது. இவ்வாறானதொரு கருத்துக்கணிப்பு நடைபெற்றாலும்கூட, வடகிழக்கு தமிழர்கள் அதில் பங்குகொள்ளமாட்டார்கள் என மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்திருக்கிறார்.

மேலும் ஜனாதிபதியின் இத்தீர்மானம் ஒரு அரசியல் சூழ்ச்சி மட்டுமே. தான் தொடர்ந்தும் பதவியில் இருக்கவே ஜனாதிபதி இவ்வாறு நடந்துகொள்கிறார் என்றும் அவர் கூறியிருக்கிறார். மேலும் நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கு 1994ஆம் ஆண்டிலேயே மக்கள் ஆணையை வழங்கிவிட்டார்கள். இன்றுமொரு தடவை ஆணையை ஜனாதிபதி எதிர்பார்ப்பது ஏனென்றும் அவர் கேள்வி எழுப்பினார். தமிழ்மக்களுக்கு இந்த கருத்துக்கணிப்பு அவசியமற்றது என கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் வலியுறுத்தியுள்ளார். (க-6)

# உயிரிழந்த அரச ஊழியர்களுக்கு நட்டஈடு வழங்குவதில் நெருக்கடி

(கொழும்பு)

இயற்கை அனர்த்ததினால் உயிரிழந்த அரச ஊழியர்களுக்கு நஷ்டஈடுகளை வழங்குவதில் நெருக்கடிகள் தோன்றியுள்ளதாக பொதுநிர்வாக அமைச்சு தெரிவித்திருக்கின்றது.

அரச ஊழியர்கள் தொடர்பாக உரிய தகவல்கள் இதுவரை கிடைக்காமையே இந்த நிலைமைக்கு காரணம் என பொதுநிர்வாக அலுவல்கள் அமைச்சு அமரசிறி தொடங்கொட தெரிவித்திருக்கிறார்.

சுனாமி அனர்த்தம் காரணமாக உயிரிழந்த அரச ஊழியர்கள் தொடர்பாக அமைச்சு மட்டத்திலும், மாகாண மட்டத்திலும் தகவல்களை வழங்குமாறு பொது நிர்வாக அமைச்சு உத்தரவிட்டுள்ள அதேவேளை, நட்டஈடு கோரி இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், சுனாமி அனர்த்தத்தினால் காணாமல்போன அரச ஊழியர்கள் தொடர்பாகவும் மோதிய தகவல்கள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (7-9)

# உள்ளூராட்சி வார செயற்திறன் போட்டிகளுக்கான பரிசளிப்பு

வடக்கு-கிழக்கு மாகாணத்தில உள்ள மாநகரசபை, நகரசபை, பிரதேசசபை உட்பட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கிடையே நடாத்தப்பட்ட 2003 ஆம் ஆண்டிற்கான உள்ளூராட்சிவார செயற்திறன் போட்டிகளிற்கான பரிசளிப்பு விழா நாளை மறுதினம் திருகோணமலையில் உள்ள வடக்கு-கிழக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலக கேட்போர் கூடத்தில் முற்பகல் 11.00 மணிக்கு நடைபெறவுள்ளதாக வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரினால் சகல உள்ளூராட்சி மன்றங்களிற்கும் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பரிசளிப்பு விழாவிற்கு வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்ணான்டோ பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

மாநகரசபைகளுக்கிடையேயான செயற்திறன் போட்டியில் மாகாண மட்டத்தில் மட்டக்களப்பு மாநகர சபை முதலாம் இடத்தையும், யாழ்ப்பாண மாநகரசபை 2 ஆம் இடத்தையும் பெற்றுள்ளது.

நகரசபைகளுக்கிடையிலான செயற்திறன் போட்டியில் மாகாண மட்டத்தில் வவுனியா நகரசபை முதலாவது இடத்தையும், சாவகச்சேரி நகரசபை 2 ஆவது இடத்தையும், வல்வெட்டித்துறை நகர சபை 3 ஆவது இடத்தையும் பெற்றுள்ளது.

பிரதேசசபைகளுக்கான செயறதிறன் போட்டியில் வலிகாமம் தெற்கு பிரதேசசபை - சுன்னாகம் மாவட்ட, மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-47)

# தனியார்துறையினரின் சம்பள விவகாரத்தில் தலையிடாதீர்கள்

## வர்த்தகத் தலைவர்கள் அரசுக்கு எச்சரிக்கை

தனியார்துறையினரின் சம்பளத்தை அடுத்த மாதம் முதல் ஆயிரம் ரூபாவினால் அதிகரிப்பது என்ற சட்டமூலத்தை சபையில் சமர்ப்பிக்கவுள்ள நிலையில் தனியார் துறையின் சம்பள விவகாரத்தில் தலையிடாதீர்கள் என வர்த்தகத் தலைவர்கள் அரசாங்கத்தினை எச்சரித்துள்ளனர்.

வர்த்தகர்களின் கூட்டு ஒன்றியம் நடாத்திய செய்தியாளர் மாநாட்டில் வர்த்தக சம்மேளன தலைவர் இது தொடர்பாக தெரிவிக்கையில், "மேற்படி அரசின் தீர்மானத்தினால் தனியார்துறையினரின் முன்னேற்றம் தடைப்படுவதாகக் கூறினார்.

அரசிற்கு செலுத்தும் வரிகள் தவிர தனியார்துறையினர் 12 வீதம் ஈ.பி.எவ்றகும், 3 வீதம் ஈ.ரி.எவ்விற்கும் செலுத்தப்படுகிறது.

1979 ஆம் ஆண்டிலிருந்து வெற்றிகரமாக ஆட்சி நடத்திய அரசாங்கங்கள் எதுவும் தனியார் துறையில் தலையிடவில்லை.

ஆனால் அவர்களின் ஈ.ரி.எவ் இற்கான 0.5 சதவீதத்தினால் அதிகரிப்பதற்கான சட்டமூலத்தை கொண்டுவரவிருப்பதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இது தேவையற்ற விடயம். இதனால் தொழிலாளர் நம்பிக்கை நிதியத்திற்கு வருடத்திற்கு 800 மில்லியன் கூடுதலாகக் கிடைக்கும்.

இம்மேலதிக நிதி எதற்காகத் தேவை என நாம் வியப்படைகிறோம்" இவ்வாறு வர்த்தகத் தலைவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (க-6)


## விற்பனைக்கு

சகலவிதமான சொனி, பனசொனிக், ரொசிபா கலர் T.Vகளையும், CD, VCD, DVDகளையும், ரேடியோ கசற் றெக்கோடர்களையும், றைஸ் குக்கர், காஸ்குக்கர், பிறைசோ குக்கர், மின்விசிறிகள், அன்ரனா, பூஸ்ரர் வயர், பைப் செற்கள், சிற்றிசன், சீகோ மணிக்கூடுகளையும், சுவர் மணிக்கூடுகளையும், மின்சாரப் பொருட்களையும், அன்பளிப்பு அலங்காரப் பொருட்களையும் ஒரே இடத்தில் நிதான விலையில் பெற்றுக்கொள்ள

## நியூ சிற்றி ரேடர்ஸ்

குளத்துக்கு முன்பாக T.P: 222 3226 135 கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்


# செய்தித் துளிகள்

## மஹாகும்பாபிஷேகம்

(பொன்னாலை)

வேலணை மேற்கு பெரியபுலம் முடிப்பிள்ளையார் ஸ்ரீ மஹா கணபதிப்பிள்ளையார் ஆலய மஹா கும்பிஷேகம் நாளை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பிற்பகல் இன்று மதியம் 12 மணிவரை எண்ணெய்க்காப்புச் சாத்துதல் இடம்பெறும். மஹா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 45 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7-49)

* * *

(புங்குடுதீவு)

புங்குடுதீவு கண்ணகை அம்மன என வழங்கும் இராஇராஜேஸ்வரி அம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது.

அடியார்களின் எண்ணெய் சாத்தும் வைபவம் செவ்வாய்க்கிழமை இடம்பெறும். (7-121)

* * *

(பொன்னாலை)

வல்வெட்டித்துறை பெரிய தம்பிரான் ஆலய மஹா கும்பாபிஷேகம் நாளை காலை 9.45 மணிக்கு நடைபெறவுள்ளது.

இன்று காலை 8.00 மணி முதல் எண்ணெய்க்காப்புச் சாத்துதல் நிகழ்வு இடம்பெறும். (7-49)

## அன்பளிப்பு

(புங்குடுதீவு)

புங்குடுதீவு கலட்டி வரசித்தி விநாயகர் ஆலய பிரதமகுருவும் தற்போது கனடாவில் வசித்து வருபவருமான கனடா திருமண பதிவாளர் குலபூஷணம் வி.விஜயதாச குருக்கள் யா/புங்குடுதீவு மகாவித்தியாலயத்துக்கு கணனி, பிரிண்டர் ஆகியவற்றையும், யா/புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயத்துக்கு மின்பிறப்பாக்கியையும், மின்குமிழ்களையும் அன்பளிப்பாக வழங்கியுள்ளார். (7-126)

## விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடெட் 'பரிசோதனை உதவியாளர்" பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

18வயதுக்கும் 45வயதுக்கும் இடைப்பட்ட பட்டதாரிகள் ஏப்ரல் 5 ஆம் திகதி முன்னர் கொழும்பு 02யூனியன் பிளேஸ், இல.356 இலங்கை மினரல் சேன்ட்ஸ் லிமிடெட் என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். (க-21)

## வலம்புரி செய்தியால் ஆசிரியர் நியமனம்

(புங்குடுதீவு)

யா/புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயத்துக்கு பல வருடங்களாக ஆங்கில ஆசிரியர் நியமிக்கப்படாத நிலைமை காணப்பட்டது. இந்நிலையில் வலம்புரி பத்திரிகையில் வெளியான தகவலையடுத்து தற்போது ஆங்கில ஆசிரியர் நியமிக்கப்பட்டமையையிட்டு பெற்றோர்கள் வலம்புரிக்கு தமது நன்றியைத் தெரிவித்துள்ளனர். (7-121)

## இடமாற்றம்

தனங்கிளப்பு, மறவன்புலே ஆகிய இருபகுதி மக்களுக்கும் இதுவரை கைதடி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தினால் நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டன.

சாவகச்சேரிப் பகுதியில் வாழும இப்பகுதி மக்களின் நன்மைகருதி சாவகச்சேரி பழைய பொலிஸ் நிலைய வீதியில் அமைந்துள்ள ஒரு தனியார் வீட்டில் வைத்தே இவை வழங்கப்பட்டன. தற்போது இச் சங்கம் நேற்று திங்கட்கிழமை தொடக்கம் அதே வீதியில் முன்னர் சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் இயங்கிய ஒரு தனியார் வீட்டுக்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இக்கிளையில் நிவாரணப் பொருட்கள் மட்டுமே வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (7-37)

# இந்தியாவை சமாதானப்படுத்த அமெரிக்கா முயற்சி மிக நவீன போர் விமானங்களை வழங்க இசைவு

(வோஷிங்டன)

பாகிஸ்தானுக்கு எப் -16 ரக நவீன ஜெட் போர் விமானங்களை அமெரிக்கா மீண்டும் விற்பனை செய்யவுள்ளது. இதற்கு இந்தியா தனது கவலையையும், கண்டனத்தையும் தெரிவித்திருந்தது. அதை ஒதுக்கித் தள்ளிவிட்டு, பாகிஸ்தானுக்கு நவீன போர் விமாணங்கள் வழங்குவதில் எந்த மாற்றமும இல்லை என்று அமெரிக்கா திட்டவட்டமாக அறிவித்துவிட்டது.

அமெரிக்காவின் இந்த முடிவை, ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ், இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தெரிவித்தார். புஷஷிடம் இந்தியாவின் ஏமாற்றத்தை வெளியிட்ட மன்மோகன்சிங் இந்தியாவின் பாதுகாப்புச் சூழலில் இந்த முடிவு எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தும் என்று தெரிவித்தார்.

ஏற்கனவே பாகிஸ்தானுக்கு எப்-16 ரக விமானங்களை அமெரிக்கா வழங்கிவந்தது.

அமெரிக்காவின் அணு ஆயுத பரவல் தடைக் கொள்கைக்கு மாறாக, அணு ஆயுத உற்பத்தியில் ஈடுபட்டதால் கடந்த 1990 ஆம் ஆணடு முதல் இந்தப் போர் விமானங்களை பாகிஸ்தானுக்கு வழங்குவது நிறுத்திவைக்கப்பட்டது.

இப்போது, "பாகிஸ்தான் தனது பழைய நிலையிலிருந்து மீண்டும 'வெகுதூரம்' வந்துவிட்டதால் இந்த முடிவை எடுத்து இருப்பதாக" அமெரிக்க வெளியுறவுத் துறை மந்திரி கண்டோலிசா ரைஸ் அறிவித்திருக்கிறார்.

அதேநேரத்தில் எப் -16 ரகத்தை விட அதிநவீன போர்விமானமான எப் -18 ரக விமானங்களை இந்தியாவுக்கு விற்கத்தயார் என்றும் அமெரிக்கா அறிவித்துள்ளது. ராடார் கருவிகள் மற்றும் ஏவுகணை தயாரிப்பில் ஒத்துழைப்பு உட்பட இந்தியாவுடன் விரிவான இராணுவ முக்கியத்தும் வாய்ந்த உறவுகளுக்கான திட்டம் தயாரிக்கப்பட்டு, சமீபத்தில் இந்தியா சென்ற கண்டோலிசா ரைஸ் அதைப் பிரதமர் மனமோகன் சிங்கிடம் வழங்கியிருப்பதாக அமெரிக்கா உயரதிகாரி ஒருவர் கூறியிருக்கிறார்.

21ஆம் நூற்றாண்டில் உலகின் பெரிய சக்தியாக விளங்குவதற்கு உதவி செய்வதே இதன் நோக்கம் என்றும் ஜுலை மாதம் மன்மோகன்சிங் அமெரிக்கா வர வேண்டும் என்று புஷ் அழைப்பு விடுததிருப்பது போன்ற அரசியல் நோக்கங்களும் இதில் அடங்கும் என்றும் அவர் விளக்கம் அளித்தார். (து)

## இந்தோனேஷியாவில் பெரிய நிலநடுக்கங்கள்

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவின் கிழக்குப் பகுதியிலுள்ள மலுகு மாகாணத்தில் கடலுக்கு அடியில 2 முறை பெரிய நிலநடுக்கங்கள் ஏற்பட்டதால் மக்கள் பீதியில் ஆழந்தனர்.

கடந்த சனிக்கிழமை நள்ளிரவுக்குப் பிறகு முதலில் ஒரு நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவுமானியல் 6.4 அலகாக அது பதிவானது. பிறகு ஞாயிற்றுக் கிழமை அதிகாலை மீண்டும் பெரிய நிலநடுக்கம் ஏற்பட்டது. அது ரிக்டர் அளவுமானியில் 6 அலகாகப் பதிவானது.

பண்டா கடல் பகுதியில் கடலுக்கு அடியில் நிலநடுக்கம் பதிவானது. சேதம் குறித்து தகவல் ஏதும் இல்லை. (து)



லெபனான் தலைநகர் பேரூத்தில் கிறிஸ்தவர்கள் அதிகம் வாழும் கிழக்குப் பகுதியில் சனிக்கிழமை இரவு நடந்த கார் குண்டுத்தாக்குதலில் சேதமடைந்த கட்டடப்பகுதியில் தடயங்களை ஆய்வுசெய்யும் காவல்துறை அதிகாரிகள்.

# லெபனானில் கார்குண்டு வெடிப்பு

லெபனான் நாட்டின் பேருத நகரின் கிழக்குப் பகுதியில் கடந்த சனிக்கிழமை மாலை நடந்த கார் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் 2 இந்தியத் தொழிலாளர்கள், ஒரு இலங்கையர் உட்பட 6 பேர் காயமடைந்தனர்.

லெபனான் நாட்டில் இப்போது நிலையான அரசு இல்லை. சிரியா நாட்டு துருப்புகள் லெபனானை விட்டு விலகிவிட்டன.

தலைநகர் பேருத்தில் முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும் தனித் தனி பகுதிகளில் வசிக்கின்றனா. கிறிஸ்தவர்களைத் தூண்டிவிடும் நோக்கில் எதிர்ததரப்பினர் இச் செயலில் ஈடுபட்டிருக்கலாம் என்று அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

கடந்த பெப்ரவரி 14ஆம் திகதி முன்னாள் பிரதமர் ரபீக் ஹரிரி படுகொலை செய்யப்பட்டார். அதற்குப் பிறகு கிறிஸ்தவர்கள் அதிகம் வசிக்கும் பகுதியில தற்கொலைப்படையினர் மூலம் கார்களில் வெடிகுண்டுகளை நிரப்பி வெடிக்க வைக்கின்றனர். (து)

உலக தரிசனம்



தாய்லாந்தில் நடைபெற்ற அழகிப் போட்டியில் முதலிடம் பெற்ற ஜனுன் பார்ன் ரோட் ஜனை (கையைத் தூக்கியிருப்பவர்) படத்தில் காணலாம். அடுத்தடுத்த இடத்தில் வந்த அழகிகள் அருகே உள்ளனர்.

# மீண்டும் தலைதூக்கும் டான்சி நில வழக்கு

டான்சி நிலம் கொள்வனவு சம்பந்தமாக தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மீதான வழக்கில் அவர் குற்றவாலியாகக் காணப்படடு, அவருக்குச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதும். அத் தீர்ப்பை எதிர்த்து அவர் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த வழக்கு, தமிழ்நாட்டில் ஏற்பட்ட திடீர் அரசியல் மாற்றத்தினால் ஏற்பட்ட பல சாட்சியங்களின் 'பல்டியால்' விசாரணை திசை திரும்பியதும் அனைவரும் அறிந்த செய்தி.

அவ்வழக்கை விசாரித்த நீதிபதிகள் ஜெயலலிதாவின் நடவடிக்கைகள் குறித்துக் கடும் கண்டனம் தொிவித்ததோடு, முதலமைச்சர் அடிமாட்டு விலையில் அரசிடம் வாங்கிய டான்சி நிலத்தை உடனடியாக அரசிடம் ஒப்படைக்க வேண்டுமென உத்தரவிட்டிருந்தது.

நீதிமன்ற உத்தரவுப்படி டான்சி நிலம் இதுவரை அரசிடம் ஒப்படைக்கப்படாததால் தி.மு.க. வழக்கறிஞர் பாரதி, தமிழக தலைமைச் செயலருக்கு அது சம்பந்தமாகக் கடிதமொன்றை எழுதியிருக்கிறார்.

அக் கடிதத்தில் டான்சி நிலம் நதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் ஜெயலலிதாவால் அரசிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டதா எனக் கேள்வி எழுப்பியிருக்கிறார்.

இதுவரை அந்நிலம் அரசிடம் ஒப்படைக்கப்படாமல் இருந்தால, நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்தையும் ஜெயலலிதா எதிர்நோக்க வேண்டியநிலை ஏற்படும். (து)

# கம்பியூட்டர்களில் வைரஸ் பரப்பியவர் சீனாவில் கைது

(பீஜிங்)

ஒரு லட்சம் கணனிகளில் அத்துமீறி நுழைந்து வைரஸ்களை பரப்பியவரை சீனப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த நபர் வடக்குச் சீனாவின் ஹேபெய் மாகாணத்தின் தாங்பான் பகுதியில் கைது செய்யப்பட்டதாகச் சீனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆனால் அவருடைய பெயர் வெளியிடப்படவில்லை. இந்த நபர் அரச அலுவலகங்களின் கணனிகள் உட்பட பல்வேறு கணனிகளின் இண்டர்நெட்மூலம் அத்துமீறி நுழைந்து தகவல்களைச் சேதப்படுத்தியதுடன், வைரஸ்களையும் பரப்பியுள்ளார். மொத்தம் ஒரு லட்சம் கணனிகளில் இவ்வாறு தனது கைவரிசையைக் காட்டியுள்ளார். அதில் 60 ஆயிரம் கணனிகள் சீனாவின் பல்வேறு பகுதிகளில் உள்ளவை என்பது குறிப்பிடத்தக்கது. (7)

# வட துருவத்தால் புற்றுநோய் ஆபத்து? விமான நிறுவனத்துக்கு எச்சரிக்கை

வட துருவப் பகுதி மீது அதிக நேரம் பறக்கவேண்டியிருப்பதால் கதாய் பசிபிக் விமான நிறுவனம் தனது ஹாங்காங் -நியூயோர்க் விமான சேவையை குறைத்துக் கொண்டுவிட்டது.

வட துருவப் பகுதிமீது அதிக நேரம் பறக்கும்போது விமானத்தில் பணிபுரியும் விமானக் குழுவினருக்கும், வான் பயணிகளுக்கும் புற்றுநோய் ஏற்படக்கூடிய ஆபத்து அதிகம் என்று விஞ்ஞானிகள் எச்சரித்தனர். இதை விமான பணிக் குழுவினர் விமான நிறுவனத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

அதன் பிறகே, மாதத்துக்கு இருமுறை மட்டுமே, எங்கும் நிற்காமல் ஹாங்காங்கிலிருந்து நியூயோர்க்குக்குப் பறக்கும சேவையை நடத்துவது என்ற முடிவுக்கு நிர்வாகம் வந்தது. வட துருவப் பகுதியில் 8000 மீற்றர் உயரத்துக்கு மேல் விமானம் பறக்கும் போது அங்கிருந்து வெளிப்படும் கதிர்வீச்சு, புற்றுநோயை உண்டாக்கும் விதத்தில் செல்களைத் தூண்டும் என்று ஆய்வாளர்கள் எச்சரித்தனர்.

ஆனால் சாதாரண, விமான சேவைகள் இம் மார்க்கத்தில் இன்னமும் அதே எண்ணிக்கையில் தொடர்கின்றன. நிற்காமல் செல்லும் சேவை மட்டுமே கட்டுப்படுததப்பட்டிருக்கிறது. (து)

# சுனாமி சமிக்ஞை ஜப்பானில்

(ஜப்பான்)

ஜப்பானில் சுனாமி முன்னெசரிக்கை சமிக்ஞை முறை நேற்று ஆரம்பமாகியிருக்கிறது.

பசுபிக் பிராந்தியத்தில் ஆறு நாடுகளுக்கு இதன்மூலம் சுனாமி முன்னெச்சரிக்கைத் தரவுகளை வழங்க ஜப்பான் திட்டமிட்டுள்ளது.

கடந்த டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தைத் தொடர்ந்தே முன்னெச்சரிக்கைத் திட்டத்தின் அவசியம் உணரப்பட்டுள்ளது.

இந்துசமுத்திரத்தில் 9 ரிகடர் அளவிலேயேற்பட்ட சுனாமி அனர்த்தம் காரணமாக சுமார்3 இலட்சம பேர் பலியாகினர். இதைத் தொடர்ந்து சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களிலிருந்து மக்களை பாதுகாப்பதற்காக இந்த சர்வதேச எச்சரிக்கைத் திட்டம் அமுலாக்கப்படுகின்றது.

ஜப்பானில் வானிலை அவதானி நிலையத்தால் ரஷ்யா, தென் கொரியா, சீனா, பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா, துபாய் ஆகிய நாடுகளுக்கு சுனாமி முன்னெச்சரிகைத் தரவுகள் இதன்மூலம் வழங்கப்படும்.

என்னென்ன இயற்கை அனர்த்தங்கள் ஏற்படும் என்றும் அவை எங்கு, எப்போது, எந்தளவில் ஏற்படும் என்பதையும் இதன்மூலம் அறியக் கூடியதாகயிருக்கும். (7)



இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட தினம் புனித வெள்ளியாகவும், அவர் மீண்டும் உயிர் பெற்றதினம் ஈஸ்டர் பண்டிகையாகவும் கொண்டாடப்படுகிறது. புனித வெள்ளியன்று இயேசுவைச் சிலுவையில் அறைந்ததைக் குறிக்கும் வகையில் கிறிஸ்தவர் ஒருவர் சிலுவையைச் சுமந்து செல்கிறார்.

# பறவைக் காய்ச்சலை தடுக்க தென் கொரியா உதவியளிக்கும்

(வடகொரியா)

வடகொரியாவில் பறவைக் காய்ச்சல் தொற்றைத் தடுப்பதற்கு உதவிகளை வழங்க தென்கொரியா தயாராக உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வடகொரியா அரச அதிகாரிகளிடமிருந்து உதவி கோரப்படுமாயின் இவ் உதவிகளை வழங்க வுள்ளதாக தென்கொரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தலைநகர் யொங் ஜாங்கில் உள்ள 2கோழிப் பண்ணைகளில் பறவைக் காய்ச்சல் நோய் ஏற்படடிருப்பதாக ஊர்ஜிதம் செய்யபபட்டிருக்கிறது.

இந்த வைரஸ் பறவைகளிலிருந்து மனிதர்களுக்குத் தொற்றுகின்றனவா என்பது இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை. எனினும் மனிதர்கள் இவ்வைரஸினால் பாதிக்கபட்டமை தெரிய வந்துள்ளது.

வடகொரியாவிருந்து சிறியளவிலேயே கோழிகளை இறக்குமதி செய்யும் ஜப்பான் அதன் இறக்குமதியை நிறுத்தியுள்ளது.

2003 டிசெம்பர் தொடக்கம் 2004 மார்ச் வரை தென்கொரியாவில் பறவைக் காய்ச்சல் நோயினால் பீடிக்கப்பட்ட 14 சந்தர்பங்கள் உறுதி செய்யப்பட்டுள்ளன என்றும் ஆயினும் மனிதர்களைத் தொற்றியுள்ளமை தொடர்பாக எதுவும் அறிவிக்கப்படவில்லையென வும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (7)

## தவிக்கும் உள்ளங்கள்

நிலை மாறும் உலகில்
நிலை மாறியது எம் வாழ்வு
தாரகை வீட்டில் பஞ்சணையில் துயின்று
தாகத்துக்கு குளிர்பானம் அன்று
ஓலைக்குடிசையிலே
ஓவென்று அழுகின்றோம்
தாகத்துக்குத் தண்ணீருக்காய்
தவிக்குது எம் உள்ளங்கள் இன்று
கடலன்னையே...
இது உனக்கே தகுமா...?

பா.சத்யா,
மீசாலை.

## அன்றும் இன்றும்

கூடி மகிழ்ந்து
துதுகலித்த எங்களை
கூடிநின்று
ஏங்கித் தவிக்கும்படி
போ அலையும் வந்ததே
அள்ளி அருந்தும் தண்ணீருக்காக
அனல் வெயிலில் நிற்கும்
நிலையும் வந்ததையோ!

க.சுகிரதன்,
சங்கானை.

# மௌனத்தின்



## ஏக்கம்

திடீரென ஏற்பட்ட சுனாமியால்
திக்குக் கலங்கிய மக்கள்
பருக நீரின்றி அலையும்
பரிதாப நிலையடைந்து
குடங்களை வரிசையில் அடுக்கி
குடங்கள் எப்போ நிரம்பும்
என்று எண்ணியவண்ணம்
ஏக்கத்துடன் நிற்கிறார்கள்
பருகும் நீருக்கு.

P.S.ராணி, வட்டுக்கோட்டை.

## தட்டுப்பாடு

யுத்த காலத்திலே
அரிசிமண்ணெய் தொட்டுப் பெற
கியூ வரிசையிலே - மக்கள்
வீதியோரம் தவமிருப்பது போல
விழிமூடா எதிர்பார்ப்புடன் - சிறுவர்
நீரன்றி பொருட்கள் பெறவோ?
சட்டிபானை குடங்களை
சீராக அடுக்கி காத்திருக்கின்றனர்
உதவி வழங்கும் நாடுகளே! - எம்
மழலைகள் மகிழ்வடைய
உங்கள் பணிகளைச் செய்யுங்கள்.

இரா.குமரகுரு, பண்டத்தரிப்பு.

# தேடல்கள் - 52

## கியூ

சிரமத்திற்கு ஆளாக்கப்பட்ட சிறார்களே!
வறுமையை மறந்து கல்வி கற்று
வாழ்வை வளமாக்கவென்றால்...
பரிதவிக்கும் அனர்த்தங்களால்
அல்லல்பட்டு நிவாரணத்திற்கு ~ கியூ
மா தட்டுப்பாட்டால் ~ வெதுப்பகத்தில்
மா போல பாணுக்கு ~ கியூ
வறட்சியினால் இப்போ
தண்ணீருக்கும் கியூவா?
படித்துப் பாடுபட்டு பல்கலை கற்கச்
செல்ல அங்கும் கியூவே!
தமிழனாய்ப் பிறந்ததனால் எதற்கும் கியூதானே.

பொ.புனிதன், வரியப்புலம்.

## ஏறெடுப்பாரோ...?

யுத்தமென்ன தமிழனுக்கே சொந்தமா?
சொத்திழந்தோம்
சொந்த உரை இழந்தோம்
அகதி-முகாம்களே தஞ்சமென புகுந்தோம்
கல்வியிழந்தோம் கற்கும் கூடங்கள் இழந்தோம்
குண்டுமழைகளையே குடித்து வாழ்ந்தோம்
இன்று குடிநீருக்கும் கியூவில் நிற்கிறோம்
இதையெல்லாம் ஏறெடுக்குமோ
சர்வதேசம்....?

M.சந்திரகலா, யோகபுரம்.

# மௌனத்தின் தேடல்கள் - 54



அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றும் உள்ளத்து உணர்வுகளை மிகச் சிறிய கவிதைகளாக்கித் தபால் அட்டையில் வலம்புரி - சங்குநாதத்திற்கு அனுப்பிவையுங்கள.

**கிடைக்கவேண்டிய இறுதித் திகதி** - 04.04.2005

அனுபபவேண்டிய முகவரி:- மௌனத்தின் தேடல்கள்- 54

**வலம்புரி - சங்குநாதம்**
15, வெள்ளாந்தெரு, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.




## மீட்டிப் பார்த்தபோது...

நடந்த பாதச்சுவடுகளை
மீண்டும் ஒருமுறை
திரும்பிப் பார்க்கின்றேன்...
கடற்கரையினில்
நடந்ததால் அலைகள
அவற்றைவிட்டு வைக்கவில்லை
கொந்தளிக்கும் கடலினை
கோபமாய் உற்றுநோக்கினேன்
கடலிலே அலை போராடுது
என் மனதிலே அமைதி போராடுது
அமைதிதேடிய என் மனம்
அலைகடலை நாடியபோது
இரவின்பிடியில் என்
தனிமை சிக்கிக்கொண்டது
மேகக்கூட்டம் ஆங்காங்கே
இருள் கூட்டமாகத் தெரிகிறது
யுத்தமேகங்கள் போல் அவை
தென்பட்டது!
பூமியை முத்தமிட தயாராகின்றதுபோல
என் மனதில் சந்தேகம்
மீண்டும் ஒருமுறை யுத்தமா?
வேண்டாம் எனக் கடவுளிடம்
கைகூப்பினேன் எனக்காக அல்ல
அனைவருக்காகவும்.



M.இந்திரகலா, யோகபுரம்.

## இஸ்டம் இல்லை...

நாணமா? என்று
நயமாயக் கேட்டேன்
நலமே யென்றாள்
நாணம் கொண்டு
ஊரும் பேரும்
உணர்வும் கேட்டு
பக்கம் போக யான்
பாதம் நகர்த்த....
பதறிக்கொண்டு
"உனது கையில்
உழைப்பு உண்டா...?"
உயிரை உருக்கும்
வார்த்தை கேட்டாள்
வசந்தம் தேடி வலியப் போகில்
வருவதென்ன?
நிறுத்திக்கொண்டேன்
நிம்மதி யுண்டென
பற்பல பேர்கள் பக்கம் வந்திட
துடிக்கிறாரின்று
துளிகூட எனக்கு
இஸ்டமில்லை... இன்று
இந்த வாழ்வில்...!

சி.மதியழகன், திக்கம்.

## மனிதனே....

மண்ணைச் செதுக்கியதால்
நல்ல விளைச்சல் கண்டது
கல்லைச் செதுக்கியதால்
அழகான ஓவியம் கிடைத்தது
பொன்னை உருக்கியதால்
விதவிதமான ஆபரணம் கிடைத்தது
மனிதா! உன் மனதை எப்போது
பண்படுத்தப் போகிறாய்? - அவை
பேராசை தீய ஆசைகளால்
இறுகிப்போயுள்ளன - உன்
மூளையைச் செதுக்கினால்
நல்ல சிந்தனை கிடைக்கும்
இன்றே செதுக்கிடு!
நாட்டுக்கு உன் சேவை வேண்டும் - அவை
நலமாய் அமையட்டும்!

M.சந்திரகலா,
யோகபரம்.

## அவள் என் உலகம்

கன்னியவள் கன்னமிரு கனி
இவள் விழிகளோ கயல்மீன் போல்
பின்னி வரும் காலழகோ தனி - இதை
பார்த்தவர்கள் ஆவரே முனி!

காதல் மொழி பேசுவது விழி - அதை
கற்கண்டாய் கொட்டுமவள் இதழ் மொழி!
இவள் காலமெல்லாம் மங்காத ஒளி!



காரிகை அவள் மனம்
பாலிலும் வெள்ளை
சிற்பி வந்து செதுக்காத சிலை - இந்த
சொர்க்கத்தினிலே இவள் புதிய கலை!

தேந்தமிழ் பாட்டுமல்ல மது - இவள்
ஏழிசைகள் அடங்காத இசை - இந்த
இசை மேனி இல்லை வெறும் அசை!

S.K.அயூர்தி.
சங்கானை.

## இயற்கையை மீறினால்...

"அன்னம்மா உந்தன் தலையென்ன
நரை திரண்டு போச்சு - கொஞ்சம்
'டை'யடித்துப் பாரேன்" - என்றே
பக்கத்து வீட்டுப் பரிமளம் கூற!
அதனையும் வாங்கி - அவளே கொடுத்தாலாம்

ஓரிரு தினமதில் கருநரை கண்டதாலே
உள்ளம் பூரித்துவகையினாலும்
பத்திரிகை மீதில் பறிகொடுத்தே மனதை
அழகு நிலையமொன்றின் விளம்பரங் கண்டதாலும்
தேடிப் போயாங்கே 'பேஷியலும்' செய்தாளாம்

நாட்கள் பல சென்றே ஓர்நாள்
பேர்த்தி பூரணியுடனே - அன்னம்மா
வேகமாய் விரைந்தாள் கோவில்
நெடுநாளின் பின்னர் கண்ட
நல்லம்மா உடனே கேட்டாள்
"இந்தளவில் ஓர் பிள்ளை
உந்தனுக்கு இருக்கின்றாளா?"
வெட்கம் தலைக்கேற "என் பேர்த்தி
இவள" என்றாள் வெறுப்போடு அன்னம்மா

ஜெ.சுபா, நல்லூர்.

## ஏன் இந்தப் பூமியில்...

பத்து மாதம் சுமந்து
தவமிருந்து பெற்ற தாயோ
சோகத்தோடு பார்க்கிறார்!
நாலெழுத்து எனக்குப் போதித்து
உலகத்தில் தலைநிமிர வைத்த
தந்தையோ
ஏக்கத்தோடு பார்க்கிறார்!
அண்ணா என அழைத்து
அன்பு மழை பொழியும் சகோதரியரோ
பயத்தோடு தூரநின்று வெறிக்கின்றனர்!
சிறுவயதில் கூடிக் குலாவி
குறும்பு பல செய்த நண்பர் குழாமோ
எட்டி நின்று பார்க்கின்றனர்!
ஏனிந்த நிலைமை எனக்கு...
ஓ... நான் எயிட்ஸ் நோயாளி என்பதாலா?
இறைவனே! இனியும் நான்
ஏனிந்தப் பூமியில்...

K.T.விந்தன்,
புலோலியூர்.

வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை - குறள்

வலம்புரி

# திட்டமிட்ட நிவாரணப் பணியே தேவையானது

கடல்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணியில் அரசும் விடுதலைப் புலிகளும் இணைந்து செயற்படுவதில் இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளதாக வெளிவந்த தகவல்கள் நிஜப்படுமாயின் அதனால் நாட்டின் சமாதானம் ஏற்படுவதற்கான சாத்தியப்பாடுகளும் அதிகரிக்கவே செய்யும்.

இயற்கை அனர்த்தம் இன, மத, மொழி வேறுபாடின்றி இந்த நாட்டின் மக்களைப் பாதித்துள்ளது. எனவே இவ் விடயத்தில் எந்தவித பாகுபாடும் இன்றி பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பணிகளை மேற்கொள்வது அனைத்துத் தரப்பினரின் கடமையாகும்.

நிவாரணப் பணிகளை மேற்கொள்ளும்போது பாதிப்பின் தன்மைக்கேற்ப நிவாரணம் வழங்கப்படவேண்டும். அதேவேளை மேற்கொள்ளப்படுகின்ற நிவாரணப் பணிகள் பாதிக்கப்பட்ட மக்களின் நுகர்வை ஈடுசெய்வதாக மட்டும் அமையாமல் வீடு, குடிநீர், தொழில் முயற்சி, கல்வி, மருத்துவம் என்ற விடயங்களை உள்ளடக்கியதாக அமைவது மிகவும் அவசியமாகும்.

இலங்கையைப் பொறுத்தவரை நாட்டின் பின்னடைவான அபிவிருத்தி நிலைமைக்கு ஒழுங்கான திட்டமிடல் இன்மையே காரணம் எனலாம். முன்கூட்டியே ஆய்வின்றி - திட்டமிடல் இன்றி கட்டடங்களை கட்டுவது பின்னர் அதனை உடைத்து விடுவது போன்றவை சாதாரண நிகழ்வுகளா கும். இதேபோன்று பொதுமக்கள் மத்தியிலும் திட்டமிட்ட செயற்பாடுகள் இல்லை என்றே கூறவேண்டும்.

குறிப்பாக ஆலயங்களை அமைப்பது பின்னர் அதனை உடைத்து புதிதாக நிர்மாணிப்பது, அரச நியதிகளின்படி வீடு, மதில் போன்றவற்றை அமைக்காது விடுவது போன்ற குறைபாடுகள் நிறையவே உண்டு.

இதனால் பொதுச் சட்டங்களை அமுல்படுத்துவது தடைப்பட அதனால் பொதுமக்களே பாதிப்படைகின்றனர். எனவே சுனாமியின் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மீள் நிர்மாணப் பணியில் ஓர் பொதுவான யாப்பை அமைத்துக் கொண்டு அதனை அனைவரும் கடைப்பிடிக்கத்தக்கவாறு திட்டமிடலை மேற்கொள்ளவேண்டும்.

குறிப்பாக பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீடமைப்பை ஏற்படுத்திக் கொடுக்கும்போது கடற்கரையிலிருந்து எந்தளவு தூரத்தில் கட்டடங்கள் அமையவேண்டும் என்ற நியதிகளை சரியான முறையில் கடைப்பிடிப்பது அவசியமாகும். இதற்குள் செல்வாக்கு கலாசாரங்கள், அரசியல் தலையீடுகள் இருக்குமேயானால் மீள் நிர்மாணப் பணிகளால் எந்தவித பயன்பாடும் இன்றி போகும் என்பது உறுதி.

அதேவேளை வீடமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கின்றபோது எழுந்தமானமான தீர்மானங்களை எடுத்துக் கொண்டு அதனை நடை முறைப்படுத்த முற்படுவதும் பாரதூரமான விளை வுகளையே ஏற்படுத்தும்.

கடந்த காலங்களில் இலங்கையில் ஏற்படுத்தப்பட்ட குடியேற்றங்கள், வீடமைப்புத் திட்டங்கள், கலை கலாசார விழுமியங்களிலும், கல்வி, தொழில் வாய்ப்பு போன்றவற்றிலும் எதிர்விளைவையே ஏற்படுத்தியது.

இந்தியா போன்ற நாடுகளில் அமைக்கப்பட்ட குடியேற்றங்கள், வீடமைப்புத் திட்டங்கள் யாவும் பெருவெற்றியைத் தந்துள்ளன. ஆனால் அந்த நிலைமை நம் நாட்டிற்கு பொருத்தமற்றதாக அமைந்தமையால், சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீடமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும்போது அந்த மக்களின் பின்புலங்கள், கலை, கலாசாரப் பின்னணிகள் பற்றி முக்கிய கவனம் எடுப்பது மிகவும் இன்றியமையாததாகும்.

# தமிழ்மக்களின் அவலநிலையை போக்க க.கா. குழு நடவடிக்கை எடுக்கவேண்டும்

## வடமராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியம் மகஜர்

இலங்கை அரசும் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளும் சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திட்டு மூன்று வருடங்கள் நகர்ந்துவிட்ட நிலையிலும் 2004 ஆம் ஆண்டு தேர்தல் நடைபெற்று ஓராண்டு நிறைவடையும் காலம் உருண்டோடிய நிலையிலும் தங்கள் தலைமையிலான அரசு தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் எதனையும் வழங்காத நிலை கண்டு வேதனை அடைகின்றோம் என வடமராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

வடமராட்சி பொது அமைப்புக்களினூல் நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் மக்கள் பேரணியில் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவருக்கு அனுப்பி வைத்த மகஜரிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அம் மகஜரின் முழுவிபரம் வருமாறு,

கடந்த மூன்று ஆண்டுகளிற்கு முன்பே பேச்சுவார்த்தைகள் ஓர் இறுதித் தீர்வை எட்டுவதற்கான சூழலில் அரசாங்கத்தை கலைத்து தங்களுக்கு சார்பான ஓர் அரசமைப்பு உருவாக்கிய பின்னர்கூட தாங்கள் பேச்சுவார்த்தைக்கான எந்த ஓர் சமிக்ஞையினை காட்டாதிருப்பது தாங்கள் எமது உரிமைகளை வழங்கத் தடையாக உள்ளமையாகவே நாம் சந்தேகிக்கவேண்டியுள்ளது.

குறிப்பாக தங்களின் தலைமையில் நாட்டை ஆளும் கட்சித் தலைமைகள் இருந்தபோதும் நடந்தவைகள் பேச்சுவார்த்தையை குழப்பி போருக்கான சூழலை உருவாக்கும் நடவடிக்கைகளாகவே இருக்கின்றன.

உயர் பாதுகாப்பு வலயம் மீண்டும் பலப்படுத்துவதும் பயன்தரு விளைநிலங்கள் ஆக்கிரமிப்பும், கடற்றொழில் செய்வதற்கு கட்டுப்பாடுகள் உருவாக்குவதும் எமது ஏகப்பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளை கொலை செய்வதும், பொதுமக்கள் மீது இராணுவ அடாவடித்தனங்களை நடாத்துவதும் பெண்கள் மீதும் பாலியல் வல்லுறவு மேற்கொள்ள எத்தனிப்பதும், உயர் பாடசாலைகளை உயர் பாதுகாப்பு வலயமாக்கியிருப்பதும், சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிகளில் எம்மை புறக்கணித்துள்ளமை, பொதுக்கட்டமைப்புக்களில் புரிந்துணர்வு இல்லாமை, சிறந்த நடுநிலைமை ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டமை என இவ்வாறு தாங்கள் எம்மைப்பற்றி சிந்திக்காத செயல்பாடுகளை வெளிக்காட்டும் பட்டியலை நீடித்துக் கொண்டே போகலாம்.

அந் நிலையிலும் இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பும், பயிற்சி வழங்கலும், இராணுவ தளபாடக் கொள்வனவுகள் தொடர்ந்தும் மீண்டும் எம்மீது தாங்கள் போரைத் தொடுப்பதற்கான தயார்ப்படுத்தல்களில் செயல்படுவதாகவே கருத முடிகிறது.

இவ்வாறான சூழலை புறம்தள்ளி தமிழ் மக்கள் தமது சொந்த மண்ணில் நிம்மதியான சுதந்திரமான அச்சமற்ற வாழ்க்கையை வாழ உடன் கீழ்வரும் நடவடிக்கைகளை மேற்கொண்டு உதவும் பட்சத்திலேயே தங்களை நாம் நம்பும் நிலை தோன்றும்.

இடம்பெயர்ந்து பல்லாண்டு அவலவாழ்வு வாழும் மக்களின் துயர்போக்க உடன் உயர்பாதுகாப்பு வலயத்தை அகற்றல்,

கட்டுப்பாடற்ற நிலையில் கடல் தொழில் செய்ய அனுமதி அளித்தல்,

உயர் கல்வி நிலையத்தில் உயர்பாதுகாப்பை அகற்றி மாணவர் அச்சமற்ற கற்றலுக்கு வசதி செய்தல்,

தமிழ் மக்கள் அடிப்படை மனித உரிமைகளை அனுபவித்து மக்கள் குடியிருப்பின் அருகில் உள்ள படை நிலைகளை அகற்றவும்,

எமது மனித உணர்வுகளை மதித்து மேற்குறித்தவற்றை நடைமுறைப்படுத்த தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இடைக்கால தன்னாட்சி அரசு தொடர்பாக பேச்சை ஆரம்பிக்க வேண்டும்.

இவற்றிற்கு தாங்கள் முக்கியத்துவமளிக்கத் தவறின் மிகுந்த மனவிரக்தியுடன் வாழும் நாம் எமது சொந்த நிலத்தில் நாம் வலிந்து போராடி வாழ வேண்டிய நிலை ஏற்படும். இதனால் நாமும் படைகளும் உயிர்ச் சேதங்களுக்கு உள்ளாகலாம். இது எமது உரிமைப் பேராகையால் உணர்வுடன் உயிரை இழந்தேனும் எமது நிலத்தைப் பெறுவோம். இவ் அவல நிலையை போக்க தாங்கள் உடன் நடவடிக்கையில் இறங்கி செயல்படவேண்டும் என விநயமாகக் கூறுகின்றோம் என அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-101-52-104-43)

# இலங்கை உருவப்படத்தில் மாற்றம்

கடலரிப்புக் காரணமாக இலங்கையின் கரையோரங்கள் உருமாற்றமடைந்துள்ளதாக கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் கலாநிதி ஆர்.ஏ.டி.பி. சமரநாயக்க தெரிவித்தார்.

தென் மற்றும் மேல் மாகாணத்தில் கரையோரப் பிரதேசங்கள் கூடுதலான கடலரிப்புக்கு உள்ளாகியுள்ளதென அவர் குறிப்பிட்டார்.

சுனாமி அனர்த்தம் காரணமாக கிழக்கு மற்றும் தென் மாகாணங்களின் கரையோரப் பிரதேசங்களின் 20 அல்லது 30 மீற்றர் தூரப் பிரதேசம் அரிப்புக்கு உள்ளாகியுள்ளதெனவும் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் தெரிவித்தார்.

இலங்கையைச் சுற்றி ஆயிரத்து 600 கிலோ மீற்றர் நீளமான கரையோரப் பிரதேசம் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (ச)

# அரச பாடசாலைகளுக்கு பற்சிகிச்சையாளர்களை நியமிக்க நடவடிக்கை

(கொழும்பு)

அரசாங்க பாடசாலைகளுக்கு பற்சிகிச்சையாளர்களை சேர்ந்துகொள்ள சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது. பற்சிகிச்சையாளர்களை எந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்வது என்ற தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை என சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் டாக்டர் நிஹால ஜெயதிலக்க தெரிவித்தார்.

பாடசாலைகளில் பற்சிகிச்சையாளர்களை சேர்த்துக் கொள்ளும் தீர்மானம் குறித்து சிலர் எதிர்ப்பு தெரிவித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைக்கு அமைய பாடசாலைகளுக்கு பற்சிகிச்சையாளர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார். (க-9)

# இ.ம.போ. சபைத் தலைவர் பதவியிலிருந்து ராஜினாமா

(கொழும்பு)

இலங்கை மத்திய போக்குவரத்து சபையின் தலைவர் கலாநிதி ஐ.எஸ். ஜெயரட்ன தனது பதவியில் இருந்து ராஜினாமா செய்துள்ளார்.

தொடர்ச்சியாக தமது வேலைகளில் ஏற்பட்ட தடைகளே தனது ராஜினாமாவிற்கு காரணம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

அவரது ராஜினாமாக் கடிதத்தை ஏற்றுக்கொண்ட போக்குவரத்து அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா, ஜெயவின் விருப்பத்திற்கு மாறாக தாம் செயற்படபோவதில்லை என்று தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7-9)

# மகரஹம புற்றுநோய் வைத்தியசாலை தாதியர்கள் அடையாள வேலைநிறுத்தம்

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மகரஹம தேசிய புற்றுநோய் வைத்தியசாலையில் கடமையாற்றும் தாதியர் குழுவொன்று இரண்டு நாள் அடையாள வேலை நிறுத்தம் ஒன்றில் ஈடுபட்டுள்ளனர்.

தேவையான விடுதி வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறு கோரியும் நலன்புரி செயற்பாடுகளின் குறைபாடுகளையும் சுட்டிக்காட்டியுமே இந்த அடையாள வேலை நிறுத்தம் நடத்தப்படுகின்றது.

மகரஹம தேசிய புற்றுநோய் வைத்தியசாலையின் தாதியர் ஆரம்பித்துள்ள வேலை நிறுத்தத்தினால் நோயாளர்கள் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகின்றது. தமது கோரிக்கைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லையாயின் எதிர்காலத்தில் கடும் தொழிற்சங்க நடவடிக்கை எடுக்கப்போவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நெருக்கடிகளைத் தீர்ப்பதற்காக குறித்த தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் பதில் செயலாளர் டாக்டர் நிஹால் ஜயதிலக தெரிவித்துள்ளார். நடைபெறும் பேச்சுவார்த்தையின் போது அவர்களின் கோரிக்கைகள் கவனத்திற்கொள்ளப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அவர் மேலும் கூறினார். (ச)

# பற் சிகிச்சை நிலையம் மூடப்பட்டுள்ளது

(பொன்னாலை)

வேலணை அரசினர் கிராமிய வைத்தியசாலையில் இயங்கிவந்த பாடசாலை மாணவர்களுக்கான பற்சிகிச்சை நிலையம் ஒரு மாதத்திற்கு மேலாக மூடப்பட்டிருக்கின்றது.

இந்த நிலையத்தில் கடமையாற்றி வந்த பல் வைத்தியரான திருமதி ஆனந்தி ஞானச்சந்திரன் மாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். இதன் பின் புதிய பல்வைத்தியர் எவ ரும் இந் நிலையத்திற்கு நியமிக்கப்படவில்லை.

இந்தப் பற் சிகிச்சை நிலையம் மூடப்பட்டிருப்பதால் தீவக மக்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். (49)

## திசைரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

மதப்பற்று இல்லாதவரும்கூட இறைவனை அடையமுடியும் நீண்டகாலம் கடினமான வழியில் பல்வேறு அனுபவங்களை பெற்ற பிறகே இது அவருக்கு கிடைக்கும்.

மதப்பற்றுடையவரோ வேகமாக இப்பிறவியிலேயே இறைவனை அடைந்து பேரின்ப நிலையை எய்வார்.

எவ்வளவு விரைவாக இறைவனிடம் பற்றுக் கொள்கிறீர்களோ அவ்வளவு விரைவாக பேரின்ப ஊற்றைப் பெறுவார்கள்.

சுவாமி விவேகானந்தர்

# ஜே.வி.பியின் எதிர்ப்பினையடுத்து அமைச்சரவைக் கூட்டம் இரத்து

(கொழும்பு)

மின்சாரசபை மறுசீரமைப்பு மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனப் பங்குகளை வெளியாருக்கு வழங்கல் ஆகியவற்றிற்கான ஒப்புதல்பெறுவதற்காக நேற்று மாலை நடைபெறவிருந்த விசேட அமைச்சரவைக் கூட்டம் திடீரென இரத்துச் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஜனாதிபதி செயலகத்தால் விசேட அறிவித்தல் ஒன்றும் நேற்று விடுக்கப்பட்டது.

மின்சார சபை மறுசீராக்கல்- திறைசேரி வசமிருக்கும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பங்கில் மூன்றில் ஒன்றை இந்திய கூட்டரசு நிறுவனமான பாரதிய பெற்றோலியம் நிறுவனத்திற்கு வழங்கல் ஆகிய நடவடிக்கைகளுக்கான ஒப்புதலைப்பெறவென நேற்று அமைச்சரவைக் கூட்டம் நடைபெறஇருந்தது.

ஆயினும் அரசின் இவ்விரு நடவடிக்கைகளுக்கும் ஆட்சிப்பங்காளிகளான ஜே.வி.பி கடும் எதிர்ப்புத் தெரிவித்ததையடுத்தே இந்த விசேட அமைச்சரவைக் கூட்டம் நடத்தப்படவில்லை என்று கொழும்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்விரு விடயங்களுக்கும் அமைச்சரவை அனுமதி வழங்குமானால் மக்கள் விடுதலை முன்னணி அதற்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்குமென கடந்த சனிக்கிழமையன்று கூடிய ஜே.வி.பியின் சிறப்புக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டிருந்தது.

ஜே.வி.வி.பியின் அரசியல்பீடம் அதன் தலைவர் சோமவன்ச அமரசிங்கவின் தலைமையில் அவசரமாகக்கூடியது. அக்கூட்டத்தில், அரச நிறுவனங்கள் ஒருபோதும் தனியார்மயப்படுத்தப்படமாட்டாது என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தேர்தல் காலத்தில் உறுதிமொழி வழங்கியிருந்தது.

எனவே தற்போது அதற்கெதிராக செயற்பட அனுமதிக்கமுடியாது. இந்த நடவடிக்கைகளை எதிர்க்கவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. அமைச்சரவைக் கூட்டத்தில் ஜே.வி.பியின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாது இவ்விரு விடயங்களுக்குமான ஒப்புதல் பெறப்பட்டால் அதற்கு எதிராக முக்கியமான அரசியல் முடிவுகளை எடுப்பது என்றும் ஜே.வி.பி திட்டமிட்டிருந்தது. இதையடுத்தே அமைச்சரவைக் கூட்டத்தை ஜனாதிபதி இரத்துச் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# வவுனியா அரசியல்துறை அலுவலகம் மீது நேற்று அதிகாலை கிரனைட் தாக்குதல்

## மூவர் படுகாயம்

தமிழீழ விடுதலைப்புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல்துறை அலுவலகம்மீது நேற்று அதிகாலை 5.50 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலின்போது மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

புகையிரத நிலையவீதி வைரவபுளியங்குளத்தில் அமைந்துள்ள அலுவலகத்தின் மீது நடத்தப்பட்ட இத்தாக்குதலில் அரசியல்துறை பணிமனையின் பணியாளர்களான தாமரைசெல்வன், நவாஸ் ஆகியோரும், அருகில் உள்ள வடக்கு கிழக்கு மாகாண புடைவை திணைக்களத்தின் காவலாளியான தனபாலன் என்பவரும் காயமடைந்துள்ளனர். இவர்கள் வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மிதிவண்டியில் வந்த கும்பல் ஒன்றே கைக்குண்டுகளை எறிந்துவிட்டு தப்பியோடியதாக பொலிஸார் தெரிவித்தனர். கடந்த ஆண்டு நடுப்பகுதியிலும் இதே அரசியல்துறை அலுவலகம் மீது தாக்குதல் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. இரண்டாவது முறையாக இத்தாக்குதல் நடந்துள்ளது. இந்த கைக்குண்டுத் தாக்குதல் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணை நடத்தி வருகின்றனர்.

இத்தாக்குதல் தொடர்பாக உரிய விசாரணையினை மேற்கொள்ளுமாறு போர் நிறுத்த கண்காணிப்பு குழுவினரை வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பா ளர் து.ஞானவேல் கேட்டுக்கொண்டுள்ளார். ஏற்கனவே ஒருமுறை இந்த அலுவலகத்தின் மீது கைக்குண்டு தாக்குதல் நடத்தப்பட்டதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை வவுனியாவில் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்ட விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அலுவலகத்தை வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் நேரில்சென்று பார்வையிட்டார். அவருடன் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகளும் பொலிஸாரும் சென்று பார்வையிட்டனர்.

இந்தத் தாக்குதல் பாராதூரமான விடயமாகும் என்றும் அரசியல் பணிகளுக்காக பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் மாவட்ட அலுவலகத்தை நடத்தி வருகின்றவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ள விடயம் குறித்து பொலிஸார் துரிதமான விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் எனவும் நீதிபதி கேட்டுக்கொண்டார்.

காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களுடைய வாக்கு மூலங்களையும் நீதிபதி தலைமையிலான குழுவினர் பெற்றுக்கொண்டனர். (ச-4,9)

# விசேட அதிரடிப் படையினால் குயிலின்பன் தாக்கப்பட்டார்

## மேலும் மூன்று போராளிகள் படுகாயம்

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் உட்பட நான்கு போராளிகள் இராணுவ சிறப்பு அதிரடிப்படையினரால் நேற்று கடுமையாக தாக்கப்பட்டுள்ளனர்.

நால்வரும் படுகாயமடைந்த நிலையில் கல்முனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது,

திருக்கோவிலில் உள்ள மண்டானா அகதிமுகாமுக்கு சென்ற போராளி ஒருவரை உள்ளே செல்லவிடாது சிறப்பு அதிரடிப் படையினர் தடுத்து நிறுத்தினர். இதனையடுத்து இவ்விடயம் குறித்து குயிலின்பனுக்கு அறிவிக்கப்பட்டது.

உடனடியாக சம்பவ இடத்திற்குச் சென்ற குயிலின்பன் தலைமையிலான



நான்கு போராளிகள் இராணுவத்தினருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட முனைந்துள்ளனர். அப்போது இரு தரப்பினரிடையேயும் வாக்குவாதம் ஏற்பட்டது.

இதனையடுத்து ஆத்திரம் அடைந்த அதிரடிப்படையினர் துப்பாக்கி முனைகளினால் அவர்களைத் தாக்கினர். உடனடியாக ஒன்றுகூடிய மக்கள் அதிரடிப் படையினருக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டதுடன் காயமடைந்த போராளிகளை திருக்கோவில் மருத்துவமனையில் அனுமதித்தனர்.

பின்னர் அவர்கள் அங்கிருந்து கல்முனை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். இச் சம்பவம் குறித்து போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவில் விடுதலைப் புலிகளால் முறையிடப்பட்டுள்ளது.(ச-04)

## சீனப் பிரதமர் இலங்கை வருவார்

(கொழும்பு)

சீனப் பிரதமர் பெஞ்சியாவோ ஒருநாள் விஜயமொன்றை மேற்கொண்டு எதிர்வரும் 8 ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளார். இலங்கைவரும் சீனப் பிரதமர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

சீனப் பிரதமர் தனது இலங்கை விஜயத்தின்போது சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு விஜயம் செய்வாரென்று இலங்கைக்கான சீனத் தூதுவர் ஹாவோசியா பியான் தெரிவித்துள்ளார்.

சீனப் பிரதமர் இலங்கைக்கான விஜயத்தை முடித்துக்கொண்டு பாகிஸ்தான், இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கும் விஜயம் செய்யவுள்ளார். (ச-4)

## பெற்றோலிய...

நாட்ளாவிய ரீதியான எரிபொருள் விநியோகம் பாதிக்காது எனவும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

அதேவேளை இல்ங்கை மின்சார சபையைச் சேர்ந்த தொழிற் சங்கத்தின் உறுப்பினர்களை கொழும்பிற்கு வருமாறு தொழிற சங்கத்தின் தலைவர்கள் வேண்டியுள்ளனர்.

இதேநேரம் மின்சார சபையின் தலைமைக் காரியாலயத்திற்கு முன்னால் ஊழியர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றிலும் ஈடுபட்டுள்ளனர். (ச-09)

# புலிகள் மீதான தாக்குதல் விசாரணைகள் ஆரம்பம்

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் மீது நடாத்தப்பட்ட தாக்குதல் சம்பவங்கள், கொலை முயற்சிகள் தொடர்பாக விசாரணை செய்வதற்கென ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக் குழுவின் விசாரணைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன.

அம்பாறை மாவட்ட மேல் நீதிமன்றத்தில் விசாரணைகள் இடம்பெற்றன. கடந்த பெப்ரவரி முதலாம் திகதி முதல் மார்ச் இரண்டாம் திகதி வரையிலான காலப் பகுதிக்குள் நடாத்தப்பட்ட தாக்குதல் சம்பவங்கள், கொலை முயற்சிகள் தொடர்பாக இந்த விசாரணைகள் நடாத்தப்பட்டுள்ளன.

வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதி கே.விஸ்வநாதன் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள இந்த விசாரணைகள் ஏப்ரல் முதலாம் திகதிவரை அம்பாறை நீதிமன்றக் கட்டடத்திலும், ஏப்ரல் நாலாம் திகதி தொடக்கம் எட்டாம் திகதி வரை மட்டக்களப்பு நீதிமன்றக் கட்டடத்திலும் இடம்பெறவுள்ளன.

கிழக்கு மாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நெவில் விஜயசிங்க நேற்று நடைபெற்ற விசாரணையில் சாட்சியமளித்தார்.(ச-8)

## இந்தோனேசியாவில்...

தீவில் இடம்பெற்ற புவி நடுக்கமானது பெரும்பாலும் மொரிசியஸ் நாட்டுப் பக்கமே தாக்கத்தை ஏற்படுத்துமென ஜப்பான் வானிலை அவதான நிலையம் ஒன்று அறிவித்துள்ளது.

இதேவேளை நேற்றிரவு இலங்கையின் கரையோரப் பகுதி மக்களுக்கு ஒலிபெருக்கிகள் மூலம் அறிவித்தல் வழங்கப்பட்டது.

அதனையடுத்து நேற்று நள்ளிரவு கரையோரப் பகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம்பெயர்ந்து சென்று கோயில்கள், பாடசாலைகள் மற்றும் உறவினர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர். யாழ்ப்பாணத்தில் மக்களுக்கு அபாய அறிவிப்பை வழங்கும் பணியை பொது அமைப்புக்களும், விடுதலைப் புலிகளும், பொலிஸாரும் மேற்கொண்டனர். (ச-8-4)

## சர்வதேச...

இச்சந்திப்பை மேற்கொண்டனர். தமிழீழத்தின் தற்போதைய அரசியல் சூழல், யுத்தநிறுத்த ஒப்பந்த நிலை, அமைதி முயற்சிகள், ஆழிப்பேரலைக்குப் பிந்திய சீரமைப்புப் பணிகள் ஆகியவை குறித்து சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களுக்கு விளக்கினார். ஆழிப்பேரலை சீரமைப்புக்காக நோர்வே முன்வைத்த பொதுக்கட்டமைப்பு தொடர்பாகவும் முடங்கி நிற்கும் சமாதானப் பேச்சுக்களை தொடங்குவதற்கு ஏதுவாக புலிகள் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் குறித்தும் அவர்களுக்கு விளக்கிக் கூறப்பட்டது. பேராசிரியர் ஜோகன் ஹால்டங்க், தமிழ் மக்களின் நலன்களுக்கான தமிழீழ விடுதலைப்புலிகளின் விட்டுக்கொடுப்புகள் குறித்து கேட்டறிந்த பேராசிரியர் றோஹான் ஹால்டங்க்குடன் அவர்களின் செயற்பாடுகள் குறித்து தனது பாராட்டினைத் தெரிவித்தார். அவருடன் நிறுவன இயக்குநர் குட்ரன் கிராமர், மூத்த ஆராய்ச்சியாளர் வில்பிரட் கிராப் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச)

## சமாதானப்...

இதற்கான காரணத்தை எமது மக்கள் புரிந்து கொண்டிருப்பார்கள். கடந்த வருடம் பெரிய வெள்ளியன்று பிரபாகரன் படைகள் கிழக்கில் எம்மீது தாக்குதலை ஆரம்பித்தன. ஆனால் பெரிய பிரச்சினை எதுவும் ஏற்படவில்லை. ஏனெனில் நாம் பொறுமை காத்தோம்.

இருப்பினும் நோர்வேயும், கண்காணிப்புக்குழுவும் அரசாங்கத்திற்கு கொடுத்த அழுத்தத்தால் அரசாங்கம் புலிகளுக்கு உதவியதன் மூலமே பிரபாகரன் படைகளை வடக்கிலிருந்து கிழக்கிற்கு கொண்டு வந்திருந்தார்.

போர்நிறுத்த உடன்படிக்கைமூலமே இது மேற்கொள்ளப்பட்டது. இவ் உடன்படிக்கையின்படி ஒரு பிராந்தியத்திலிருந்து இன்னொரு பிரதேசத்திற்கு படைகளை நகர்த்த பிரபாகரனுக்கு அரசாங்கம் உதவியுள்ளது என கருணா வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-06)

# பருத்தித்துறையில் நேற்று...

நேற்றுக்காலை 10 மணிக்கு பருத்தித்துறை சிவன்கோவில் முன்றலிலிருந்து பேரணி ஆரம்பமானது. பேரணியானது யாழ். வீதியூடாக பருத்தித்துறை பிரதேச செயலகத்தைச் சென்றடைந்தது. அங்கு பிரதேச செயலர் வசந்தகுமாரிடம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு முகவரியிடப்பட்ட மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

மகஜரினை வடமராட்சி கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்கச் செயலாளர் சூரியகுமார் வழங்கினார். அங்கிருந்து பேரணியானது தம்பசிட்டியில் அமைந்துள்ள போரநிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தைச் சென்றடைந்து அங்கு மாவட்ட உதவித் தலைவர் வொய்ற்றோ லீனொனெனிடம் மகஜர் கையளிக்கப்பட்டது.

தமிழில் எழுதப்பட்ட மகஜரை யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதனும், ஆங்கிலத்தில் எழுதப்பட்ட மகஜரை பாராளுமன்ற உறுப்பினர் பொ.கஜேந்திரகுமாரும் வழங்கினர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான ம.க. ஈழவேந்தன், கி.சிவநேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். இப்பேரணி காரணமாக வடமராட்சியில் வழமையான நிலை பாதிக்கப்பட்டிருந்தது.

வர்த்தக நிலையங்கள் அனைத்தும் இழுத்து மூடப்பட்டன. சன நடமாட்டம் இல்லாததால் போக்குவரத்துக்கள் குறைவாகவே இடம்பெற்றன.

இப்பேரணியில் கலந்துகொண்டோர் தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியிருந்தனர். (ச-43,104,101,52,89)










இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.03.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.